561

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

தொகுதி 16. எண்-1

மார்ச் 6, 1992

D
V2l1,31 N92
N92-16-1
161511

வெளியீடு 29-7-1992 Issued 29-7-1992

561

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT


வெள்ளிக்கிழமை மார்ச் 6, 1992 - தொகுதி 16 - எண் 1

Friday the 6th March, 1992 - Volume 16 - No. 1



சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat,

Madras-600 009


விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

**6—3—1992**


| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu .. | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | xiii—xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. | xv—xxvi |
| 1. வரவு-செலவுத் திட்டம், 1992-93, அளித்தல்— | 1—64 |

161510

J

V211,31 N92

N92.16·1



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

**ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

| | |
|---|---|
| முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத் துறை, சர்க்கரைப் பாகு கழிவு, சிறுபான்மையினர் நலம், இந்து சமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, மின்னணுவியல் மற்றும் அச்சுக் காகிதக் கட்டுப்பாடு. |
| நிதி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம். |
| சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு. |
| வருவாய்த் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராமதானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |

5. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பிற்பட்டோர் நலம், மிகப் பிற்பட்டோர் நலம் மற்றும் சீர்மரபினர், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர், முன்னாள் இராணுவத்தினர் நலம்.

6. கல்வி அமைச்சர் .. — மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : போக்குவரத்து. அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

10. பொதுப்பணித்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலைகள், மின்சாரம், மரபுசாரா எரிசக்தி வளர்ச்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை, நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர் வழங்கல்.



12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : உணவு, கூட்டுறவு, நுகர்பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளிவிவரங்கள்.

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. செ. ரகுபதி : தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி.

15. வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

16. சமூக நலத்துறை அமைச்சர். — மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத்துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீனளத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீனளம்.

19. ஊரகத் தொழில் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : சிறு தொழில்கள் ஊரகத் தொழில்கள் (குடிசைத் தொழில்கள் உட்பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

THIRU BHISHMA NARAIN SINGH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister .. .. | **The Hon. Dr. J. JAYALALITHA:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service and other All India Services, District Revenue Officers, Police, Prevention of Corruption, Industries, Prohibition and Excise, Molasses, Minorities, Hindu Religious and Charitable Endowments, Information and Publicity, Film Technology, Cinematograph Act, Tourism and Tourism Development Corporation, Mines and Minerals, Tamil Development and Tamil Culture, Electronics and Newsprint Control. |
| 2. Minister for Finance .. | **The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN:** Finance, Planning, Elections and Legislature. |
| 3. Minister for Law .. | **The Hon. Thiru K. A. KRISHNASAMY:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on Money-lending, Chits and Registration of Companies. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru S. D. SOMASUNDARAM:** Revenue, District Revenue Establishment, Deputy Colleters, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodan and Gramdan, Passports and Commercial Taxes. |
| 5. Minister for Backward Classes. | **The Hon. Thiru ERAAMA VEERAPPAN:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas Refugees and Evacuees and Welfare of Ex-Servicemen. |

| | |
|---|---|
| 6. Minister for Education | **The Hon. Thiru C. ARANGANAYAGAM.** Education, Technnical Education,: Science and Technology, Sports. and Youth Welfare and Archaeology |
| 7. Minister for Health .. | **The Hon. Thiru S. MUTHUSAMY :** Health, Medical Education, Family Welfare and Environmental Pollution Control. |
| 8. Minister for Transport | **The Hon. Thiru K.A.SENGOTTAYAN:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forests and Cinchona. |
| 9. Minister for Handlooms and Textiles. | **The Hon. Thiru E. MADHU SUDHANAN :** Handlooms and Textiles. |
| 10. Minister for Public Works. | **The Hon. Thiru S. KANNAPPAN :** Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity, Non-Conventional Energy Development and Iron and Steel Control. |
| 11. Minister for Local Administration. | **The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU :** Municipal Adminsitration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness and Urban and Rural Water Supply. |
| 12. Minister for Food and Co-operation. | **The Hon. Thiru G VISWANATHAN :** Food, Co-operation, Civil Supplies Price Control and Statistics. |
| 13. Minister for Labour .. | **The Hon. Thiru S. RAGUPATHY** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census. |
| 14. Minister for Agriculture | **The Hon. Thiru Ku. Pa. KRISHNAN :** Agriculture, Agricultural Engineering, Agro-Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |



| | |
|---|---|
| 15. Minister for Housing and Urban Development. | **The Hon Thiru T. M. SELVAGANAPATHI :** Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town Planning, Urban Development and Madras Metropolitan Development Authority. |
| 16. Minister for Social Welfare. | **The Hon. Thirumathi R. INDIRA KUMARI :** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Begger Homes, Orphanages and Correctional Administration. |
| 17. Minister for Adi-Dravidar Welfare. | **The Hon. Thiru M. ANANDAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour, Animal Husbandry, Milk and Dairy Development. |
| 18. Minister for Fisheries | **The Hon. Thiru D. JAYAKUMAR :** Fisheries. |
| 19. Minister for Rural Industries. | **The Hon. Thiru S. NAGOORMEERAN :** Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf. |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. முத்தையா

பேரவைத் துணைத் தலைவர்

பேராசிரியர் க. பொன்னுசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர் :

திரு. செ. க. ஜானகிராமன்.

டி 2 53-441 C

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ.கு., பி.ஏ., பி.எல், | இணைச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சண்முகநாதன், திரு. கோ., பி. காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| சந்திரசேகர், திரு. ஆர்., பி. ஏ. | துணைச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., டி. பி மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர் |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி. | குழு அலுவலர் |
| வெங்கடராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| சாமிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பவானி சுப்பையா, திருமதி, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| பானுமதி அனந்தராஜன், திருமதி, பி.எஸ்ஸி., பி.ஜி. எல். | சார்புச் செயலாளர் |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ., | சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| முனீர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| கணேசன், திரு. சா. பி.ஏ.; பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம். ஏ. | தலைமை நிருபர் |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர் |
| ஜெயதேவ், திரு. பி. சி. | .. தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர் |
| 2 | அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.) |
| 3 | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4 | அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை (கிழக்கு) |
| 5 | அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி |
| 6 | அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம் |
| 7 | அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர் |
| 8 | அர்ச்சுனன், திரு. க. | வீரபாண்டி |
| 9 | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 10 | அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு |
| 11 | அறிவழகன், திரு. ஆ. | [illegible] (செ.வ) |
| 12 | அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.) |
| 13 | ஆசைமணி, திரு. எஸ். | குத்தாலம் |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம் |
| 15 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம் |
| 16 | ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி—1 |
| 17 | ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.) |
| 18 | ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ) |

| | | |
|---|---|---|
| 19 | இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்றாம்பள்ளி |
| 20 | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | மேலூர் |
| 21 | இராசாராமன், திரு. சோ. | பாபநாசம் |
| 22 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 23 | இராதாகிருஷ்ணன், திரு. த.க. | திருமங்கலம் |
| 24 | இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 25 | இராமசாமி அம்பலம், திரு. கே. ஆர். | திருவாடனை |
| 26 | இராமசுவாமி, திரு. சி. | சங்கராபுரம் |
| 27 | இராமச்சந்திரன், திரு. மா.சா.மா. | இளையான்குடி |
| 28 | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | கம்பம் |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 31 | இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | செஞ்சி |
| 32 | இராமநாதன், திரு. இராம. | கும்பகோணம் |
| 33 | இராஜமன்னார், திரு.கு.சே. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 34 | இராஜன்பாபு என்கிற தணிக்கைபாபு, திரு. கி. | திருத்தணி |
| 35 | இராஜேந்திரன், திரு.பி.வி. | வேதாரண்யம் |
| 36 | இராம வீரப்பன், திரு. | காங்கேயம் |



| | | |
|---|---|---|
| 37 | இலதா பிரியகுமார், திருமதி | அரக்கோணம் (செ.வ.) |
| 38 | இளம்வழுதி, திரு. | எழும்பூர் |
| 39 | ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. | தாராபுரம் (செ.வ.) |
| 40 | ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41 | ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | பள்ளிப்பட்டு |
| 42 | கண்ணப்பன், திரு. எஸ். | திருப்பத்தூர் |
| 43 | கண்ணன், திரு. வே. | திருவண்ணாமலை |
| 44 | கந்தசாமி, திரு. கே. | தலைவாசல் (செ.வ.) |
| 45 | கருப்பசாமி, டாக்டர் எம். | குன்னூர் (செ.வ.) |
| 46 | கலியபெருமாள், திரு. ப. | திருவையாறு |
| 47 | கலைச்செல்வி, திருமதி கே. எம். | காட்பாடி |
| 48 | கவிநிலவு தர்மராஜ், திருமதி | மொடக்குறிச்சி |
| 49 | கற்பகம் இளங்கோ, திருமதி | காரைக்குடி |
| 50 | கனகவல்லி, திருமதி., என்.சி. | விளாத்திகுளம் |
| 51 | காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | உத்திரமேரூர் |
| 52 | காந்திராஜன், திரு. ச. | வேடசந்தூர் |
| 53 | காளன், திரு. கே. | வில்லிவாக்கம் |
| 64 | காளிராஜன், டாக்டர் மு. | சமயநல்லூர் (செ.வ.) |
| 55 | கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. | ஆயிரம்விளக்கு |
| 56 | கிருஷ்ணன், திரு. எஸ்.எம். | தாம்பரம் |

| | | |
|---|---|---|
| 57 | கிருஷ்ணன், திரு. கு.ப. | ஸ்ரீரங்கம் |
| 58 | கிருஷ்ணன், திரு. சி. | ஓமலூர் |
| 59 | குப்பன், திரு. க. | திருவொற்றியூர் |
| 60 | குமரி அனந்தன், திரு. | சாத்தான்குளம் |
| 61 | குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 62 | குழந்தைவேலு, திரு. சி. | குளத்தூர் (செ.வ.) |
| 63 | கோடிமாரி, டாக்டர் ஆர். | நாகப்பட்டினம் |
| 64 | கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65 | கோபால், டாக்டர் க. | நன்னிலம் (செ.வ.) |
| 66 | கோவிந்தராசு, திரு. மா. | ரிஷிவந்தியம் |
| 67 | சக்குபாய், திருமதி ரா. | கும்மிடிப்பூண்டி |
| 68 | சக்குபாய் தேவராஜ், திருமதி டி. | திருவள்ளூர் |
| 69 | சஞ்சய் ராமசாமி, திரு. | விருதுநகர் |
| 70 | சண்முகநாதன், திரு. எஸ். | ஆலங்குடி |
| 71 | சண்முகம், திரு. எஸ். வி. | மதுரை மேற்கு |
| 72 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 73 | சந்திரசேகர், திரு. வி.பி. | பொள்ளாச்சி |
| 74 | சம்பத், திரு. எ. | வாணியம்பாடி |
| 75 | சரஸ்வதி, திருமதி அ.தி. | சத்தியமங்கலம் |
| 76 | சரஸ்வதி, திருமதி ப. | கபிலர்மலை |
| 77 | சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 78 | சாத்தையா, திரு. தி. | இராஜபாளையம் (செ.வ.) |
| 79 | சாவித்திரி அம்மாள் திருமதி. ஆர். | மூகையூர் |
| 80 | சிங்காரம், திரு. ஆர். | பேராவூரணி |
| 81 | சிங்காரம், திரு. வே. | மொரப்பூர் |
| 82 | சின்னக் கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர் |
| 83 | சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி |
| 84 | சிவசுப்பிரமணியன், திரு. கு. | குறிஞ்சிப்பாடி |
| 85 | சிவபதி, திரு. என்.ஆர். | தொட்டியம் |
| 86 | சின்னசாமி, திரு. ம. | கரூர் |
| 87 | சின்னசாமி, திரு. கா. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 88 | சின்னசாமி, திரு. வி.கே. | பவானிசாகர் |
| 89 | சின்னப்பன், திரு. கே.கே. | ஜெயங்கொண்டம் |
| 90 | சீனியம்மாள், டாக்டர் மு. | அவிநாசி (செ.வ.) |
| 91 | சீனிவாசன், திரு. ஆ.கு. | பெரணமல்லூர் |
| 92 | சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி |
| 93 | சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி |
| 94 | சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம் |
| 95 | சுந்தரதாஸ், திரு. மா. | விளவங்கோடு |
| 96 | சுந்தரம், திரு. எம்.கே. | தண்டராம்பட்டு |
| 97 | சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 98 | சுந்தரவேலு, திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர் |
| 99 | சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர் |

| | | |
|---|---|---|
| 100 | சுப்பிரமணியம், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 101 | சுப்பிரமணியன், திரு. வி.என். | பெருந்துறை |
| 102 | சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 103 | சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.) |
| 104 | சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம் |
| 105 | சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை |
| 106 | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | கோபிசெட்டிப் பாளையம். |
| 107 | செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர் |
| 108 | செல்லசாமி, திரு. ஏ.டி. | ஒட்டன்சத்திரம் |
| 109 | செல்லதுரை, திரு. ஆ. | திருச்செந்தூர் |
| 110 | செல்வகணபதி, திரு. டி.எம். | திருச்செங்கோடு |
| 111 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 112 | செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113 | செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.) |
| 114 | சேகர், டாக்டர் எம்.பி. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 | சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு |
| 116 | சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம் |
| 117 | சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | தஞ்சாவூர் |
| 118 | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 119 | டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 120 | தங்கமுத்து, திரு. கு. | திருவோணம் |



| | | |
|---|---|---|
| 121 | தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம் |
| 122 | தங்கவேல், திரு. எம். | முசிறி |
| 123 | தண்டாயுதபாணி திரு. வி. | குடியாத்தம் |
| 124 | தமிழரசன், திரு. செ.கு. | வந்தவாசி (செ.வ.) |
| 125 | தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர் |
| 126 | தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127 | தர்மலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு |
| 128 | தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை. |
| 129 | தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி |
| 130 | தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.) |
| 131 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 132 | தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம் |
| 133 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 134 | துரை, திரு. எஸ்.எம். | ஆத்தூர் |
| 135 | துரைமுருகன், திரு. கு. | பல்லடம் |
| 136 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 137 | தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி |
| 138 | தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம் |
| 139 | தேவராஜ், திரு. அ. | செய்யாறு |
| 140 | தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141 | நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |

| | | |
|---|---|---|
| 142 | நடேசன், திரு. மு. | சேலம்-2 |
| 143 | நடேசன் பால்ராஜ், திரு. வெ. | நாங்குநேரி |
| 144 | நாகூர்மீரான், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 145 | நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல் |
| 146 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி |
| 147 | பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.) |
| 148 | பட்டாபிராமன், திரு. கா.ப. | காஞ்சிபுரம் |
| 149 | பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 150 | பரமசிவம், திரு. ஆர்.பி. | சின்னசேலம் |
| 151 | பரமசிவன், திரு. ஏ.எம். | சோழவந்தான் |
| 152 | பலராமன், திரு. உ. | பூங்கா நகர் |
| 153 | பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம் |
| 154 | பழனிசாமி, திரு. க. | எடப்பாடி |
| 155 | பழனிசாமி, திரு. நா.சா. | திண்டுக்கல் |
| 156 | பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர் |
| 157 | பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 158 | பழனியம்மாள் திருமதி. க. | ராசிபுரம் |
| 159 | பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர் |
| 160 | பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம் |
| 161 | பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர் |
| 162 | பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி |



| | | |
|---|---|---|
| 163 | பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை |
| 164 | பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி |
| 165 | பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர் |
| 166 | பாலசுப்ரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 167 | பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை |
| 168 | பாலன், திரு. எம்.கே. | சைதாப்பேட்டை |
| 169 | பாலையா, திரு. ஆ. | குளச்சல் |
| 170 | பிட்ரிக் டி. சோசா, டாக்டர் | நியமனம் |
| 171 | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி |
| 172 | புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி |
| 173 | புரட்சிமணி திரு. ச. | மங்களூர் (செ.வ.) |
| 174 | புருஷோத்தமன், டாக்டர் வெ. | பென்னாகரம் |
| 175 | பூராசாமி, திரு. எம். | பூம்புகார் |
| 176 | பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 177 | பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம் |
| 178 | பெருமாள், திரு. செ. | சங்காபுரம் (ம.ப.) |
| 179 | பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 180 | பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 181 | பொன்னுசாமி, திரு. வெ. | தருமபுரி |
| 182 | பொன்னுவேலு, திரு. சு.தா. | வரகூர் (செ.வ.) |

| | | |
|---|---|---|
| 183 | போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 184 | மணிமேகலை, டாக்டர் (திருமதி), க. | அரியலூர் |
| 185 | மணிமேகலை, திருமதி வி.ஜி. | அருப்புக்கோட்டை |
| 186 | மணிவாசகம், திரு. கே.பி. | உடுமலைப்பேட்டை |
| 187 | மதுசூதனன், திரு. இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188 | மரியம்உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி |
| 189 | மல்லிகா, செல்வி கோ. | புவனகிரி |
| 190 | மனோகரன், திரு. கே.ஏ. | ஓசூர் |
| 191 | மாணிக்கம், திரு. சி. | ஈரோடு |
| 192 | மாலா, டாக்டர் ஜி.ஆர். | திருச்சிராப்பள்ளி-2 |
| 193 | முகமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி |
| 194 | முத்துசாமி, திரு. சு. | பவானி |
| 195 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 196 | முருகானந்தம், திரு. கே.ஆர். | சிவகெங்கை |
| 197 | முருகையாபாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம் |
| 198 | முனிரத்தினம், திரு. ஏ.எம். | சோளிங்கர் |
| 199 | முனிவெங்கடப்பன், திரு. கே. | கிருஷ்ணகிரி |
| 200 | முனுசாமி, திரு. கா.பூ. | காவேரிப்பட்டிணம் |
| 201 | மூர்த்தி, திரு. து. | சீர்காழி (செ.வ.) |
| 202 | மோசஸ், டாக்டர் எம். | நாகர்கோவில் |
| 203 | ரகுபதி, திரு. செ. | திருமயம் |



| | | |
|---|---|---|
| 204 | ரங்கநாதன், திரு. ப. | புரசைவாக்கம் |
| 205 | ரங்கராஜன், திரு. டி.எம். | மயிலாப்பூர் |
| 206 | ரத்தினவேல், திரு. த. | திருவெறும்பூர் |
| 207 | ரமணி நல்லதம்பி, திருமதி | ராதாபுரம் |
| 208 | ரமேஷ், திரு. வி.பி.ஆர். | தூத்துக்குடி |
| 209 | ரவிக்குமார், திரு. ஏ. | பொன்னேரி (செ.வ.) |
| 210 | ரவிச்சந்திரன், திரு. வி. | உப்பிலியாபுரம் (ம.ப.) |
| 211 | ராமசுப்பு, திரு. எஸ்.எஸ். | ஆலங்குளம் |
| 212 | ராஜூ, திரு. எச்.எம். | உதகமண்டலம் |
| 213 | ராஜூ, திரு. கே.ஆர். | கூடலூர் |
| 214 | ராஜூ, திரு. கே.பி. | பேரூர் |
| 215 | ராஜேந்திரன், திரு. எஸ்.ஆர். | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 216 | லட்சுமணன், திரு. வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 217 | லாரன்ஸ், திரு. கு. | பத்மநாபபுரம் |
| 218 | லோகாம்பாள், திருமதி. ஜெ. | லால்குடி |
| 219 | வரதராஜன், திரு. செ.து. | செங்கல்பட்டு |
| 220 | விசுவநாதன், திரு. ஜி. | ஆற்காடு |
| 221 | வீரபாண்டியன், டாக்டர் பெ. | செங்கம் (செ.வ.) |
| 222 | வெங்கடராம ரெட்டி, திரு. மு. | தளி |
| 223 | வெங்கடேசன், திரு.பி.ஆர்.எஸ். | கடலூர் |

| | | |
|---|---|---|
| 224 | வேடியப்பன், திரு. தா. | போளூர் |
| 225 | வேணுகோபால், திரு. என்.ஜி. | ராணிப்பேட்டை |
| 226 | வேலையா, திரு. டி. | திருநெல்வேலி |
| 227 | ஜனார்த்தனன், திரு. தே. | விழுப்புரம் |
| 228 | ஜானகிராமன், திரு. கோ. | மேல்மலையனூர் |
| 229 | ஜீனத் சர்புதீன், திருமதி. | சேப்பாக்கம் |
| 230 | ஜெயக்குமார், திரு. எஸ். | தியாகராயநகர் |
| 231 | ஜெயகுமார், திரு. டி. | ராயபுரம் |
| 232 | ஜெயராமன், திரு. எஸ். ஆர். | சேலம்-1 |
| 233 | ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | பர்கூர் |
| 234 | ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | ஆரணி |
| 235 | ஸ்ரீதரன், டாக்டர் அ. | வால்பாறை (இ.ச.வ.) |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

| | |
|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 23, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023

1992 மார்ச் 6, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில், காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி."

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் ஒளிவிளக்குப் போன்றவன் ஆவான்.

1. வரவு-செலவுத் திட்டம், 1992-93, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே, . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நிதிநிலை அறிக்கை. (குறுக்கீடுகள்). நிதிநிலை அறிக்கை தாக்கல் ஆகப் போகிறது. உங்களுக்கு என் முடிவைத் தெரிவித்திருக்கிறேன். இதற்கு மேலும் நீங்கள் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்). என்னுடைய முடிவை உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். அதற்கு மேலே பேசுவதற்கில்லை.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே,

திரு. வே. தம்புசாமி : தலைவர் அவர்களே,

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே,

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நாளும், நேரமும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்காக ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். (குறுக்கீடுகள்). நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு, என்னுடைய முடிவை உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு). இல்லை.

[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 6

இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுப்பதற்கு இல்லை என்று தகவல் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்த அந்த அறிவிப்பு மீது நீங்கள் பேசுவது மரபும் அல்ல, முறையும் அல்ல. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு). இல்லை, அதை என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும். அறையில் வந்து கேளுங்கள். 9—47க்கு வந்து ஒன்றைக் கேட்டுவிட்டு அவையில் வந்து எழுப்புவது எந்த வகையில் நியாயம்? (குறுக்கீடு). அவையில் எழுப்புவதை விட்டுவிட்டு என்னுடைய அறைக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்). என்னுடைய அறிவிப்பின்மீது ஏதாவது பேசவேண்டுமென்றால் என்னுடைய அறைக்கு வாருங்கள். (குறுக்கீடு). முடிந்ததும் வாருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு). இங்கே எதையும் சொல்லக்கூடாது. என்னுடைய அறைக்கு வாருங்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> :

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே,

''தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு''.

'' எப்போதும் விழிப்புடன் இருத்தல், தெளிந்த அறிவைப் பெற்றிருத்தல், துணிந்து செயல்படுதல் ஆகிய இம்மூன்று பண்பு நெறிகளும், எந்த ஒரு அரசும் கைவிடாமல் கொண்டொழுக வேண்டியவை ஆகும் '' என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் பொன் மொழியாகும்.

மேற்கூறியுள்ள பண்புகளைக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தலைமையின்கீழ் அமைந்துள்ள இவ்வரசின் சார்பாக, 1991—92 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1992—93 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகளையும் நான் இந்த அவை முன் வைக்க முற்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகப் பெரும் புலவர் திருவள்ளுவனாரின் அறிவுரைக்கிணங்க, தமிழ்நாட்டில் அமைதியையும், ஆக்கத்தையும், செல்வச் செழுமையையும் கொண்டு வரும் பொருட்டு, எதிர்ப்படும் மாபெரும் இடையூறுகளையெல்லாம் வெல்வதற்கான முயற்சிகளை, நாம் முறைப்படி மேற்கொண்டுள்ளோம்.

2. இந்த அரசு பதவியேற்ற பொழுது, மாநிலத்தில் அமைதியை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும். இத்துடன் வளமான வாழ்வை நோக்கி நடைபோட வைக்க வேண்டும்



1992 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்னும் இருபெரும் அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மாநிலத்தில் அமைதியின்றேல், வளர்ச்சியும், பொருளாதாரச் செழுமையும் இருத்தல் இயலா. இங்கே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி அமைதி தவழ்வதற்கு உறுதி செய்து, மக்கள் எவ்வித அச்சமுமின்றி வாழ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியோடும், தெளிவோடும் திண்மையோடும் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இங்கே திட்டமிட்ட வளர்ச்சிக்கு இன்றியமையாததாக வேண்டப்படும் சட்டம் ஒழுங்கு நிலைமையை நன்றாக, முழுமையாகப் பேண முடிந்ததன் மூலம், விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியளிப்பது என்னும் அறைகூவலை அரசு துணிவுடன் எதிர்கொள்ள முடிந்தது.

3. நமது நாட்டில் நிலவிவரும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலையைக் குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு இறங்கியுள்ளது. இந்த நடவடிக்கைகளைப் பொறுத்துச் சில மாறுதல்களைச் செய்ய வேண்டியது மிக இன்றியமையாதது ஆகும். நமது அந்நியச் செலாவணிக் கையிருப்பு நிலைமையில் உள்ள நெருக்கடியும், உயர்ந்து வரும் கடன் சுமையும், நாட்டில் கிட்டத்தட்ட ஒரு பொருளாதாரச் சீர்குலைவைத் தோற்றுவித்திருந்தன. அந்நியச் செலாவணிக் கையிருப்பு நிலைமையையும், வெளிக்கடனையும் சமாளிப்பது என்பது, தற்போழுது உள் நாட்டுப் பொருளாதார நிலையை நிருவகிக்கும் தன்மையைப் பொறுத்து, தொடர்புடைய ஒன்றாக இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். இந்த மிகப் பெரிய பொருளாதார மாறுதல்களும், வேறுபாடுகளும் குறித்த நிருவாகம், மத்திய அரசிடம் நிலைபெற்று விளங்குகிறது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரது தேவைகளுக்குக் குறிப்பான கவனம் செலுத்திப் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். அண்மையில் தாக்கல் செய்துள்ள மத்திய அரசின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், ஏழை எளிய மக்களை பாதிக்கும் வகையில் எந்தவித நடவடிக்கைகளும் அறிவிக்கப்படவில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சியுடைகிறோம். பொருளாதாரச் சீர்திருத்தத்தைப் பொறுத்தமட்டில், மத்திய அரசு நடவடிக்கைகளை வரவேற்கும் அதே நேரத்தில், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவ்வரசிடம் நாம் வலியுறுத்துகிறோம்.

4. மாநில அரசுகள் மக்களுக்கு மிக நெருக்கமாக இருந்து செயல்படுகின்ற அரசுகளாகும். எனவே, விலைவாசிகள் உயர்வதற்கான காரணங்களை விளக்கிக் கூற வேண்டிய, ஒரு கட்டாய நிலையில் மாநில அரசுகள் உள்ளன. மிகப்பெரிய பொருளாதார நிருவாகத்தைக் கவனிக்கத் துணைபுரியும் கருவிகள் அனைத்தும் மத்திய அரசிடம் உள்ளன. அதே சமயம் மக்களுடைய, குறிப்பாக ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களுடைய வாழ்க்கைத் தரம் காக்கப்படுவதற்கு, உறுதி செய்வதற்கு எல்லா நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். தமிழ்நாட்டில் தான், குறிப்பாக ஏழை எளிய மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு உரிய சிறிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பதில், உணவு, உடை, உறைவிடம் ஆகியவை அடங்கியிருக்கின்றன. மேலும், இங்கு மிக மிகப் பலவீனமான பிரிவினர்கள் என்று கருதப்படும் கைக் குழந்தைகள், தாய்மார்கள், குழந்தைகள், ஆதரவற்ற முதியோர்கள் ஆகியோர்க்கு அளிக்கப்படுகின்ற சிறப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் இந்த ஏற்பாடுகளில் அடங்கும். 1991 ஆம் ஆண்டில், நாம் பொது விநியோக முறையின் மூலம், 17.31 இலட்சம் டன் அரிசியை வழங்கியுள்ளோம். மத்திய அரசு பொது விநியோக முறையின் மூலம் வழங்கப்படும் அரிசி விலைகளில் ஏற்றம் ஏற்படுத்தித் திருத்தம் கொண்டு வந்ததினால், நாமும் அரிசி விலையைச் சிறிது திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் நேரிட்டது. இவ்வாறு திருத்தப்பட்ட பிறகும் கூட, நாட்டிலேயே நமது மாநிலத்தில்தான, பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை, தொடர்ந்து மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த சிறப்பு முயற்சியின் விளைவாக, மத்திய அரசு நிர்ணயித்த விலையை விடக் குறைவான விலையில் நமது அரசு, 18,000 டன் பாமாயிலை சிறப்பான முறையில் விநியோகித்துள்ளது. வெளிச்சந்தையில் அரிசியின் விலையைக் குறைக்கும் நோக்கத்துடன், வர்த்தகர்கள் மீது லெவி விதிக்கும் முறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1992 பிப்ரவரியில் அரிசியின் விலைகள் ஓரளவுக்குக் குறைந்துள்ளன. இந்த ஆண்டில் நெல் கொள்முதல் சிறப்பாக நடைபெற்றுள்ளது. நாம் இந்த ஆண்டில் 14 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்வது என்னும் உச்ச அளவை எட்ட முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கையைக் கொண்டுள்ளோம். பொது விநியோக முறையில் அரிசி போதுமான அளவுக்குச் சீரான வகையில் தொடர்ந்து விநியோகிக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதி கூறுகிறோம். பதுக்கலுக்கு எதிராகவும், கள்ளக்கடத்தலுக்கு எதிராகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் தற்போது நிலவி வரும் ஒட்டுமொத்தப் பணவீக்க நிலைமையிலும், அரசு விலைவாசிகளைக் குறைப்பதற்குத், தன்னால் முடிந்த அளவு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது.



5. மத்திய அரசின் நிதி நிலை குறித்து அக்கறை கொள்கின்ற அதேசமயத்தில், மாநிலங்களின் நிதி நிலைமையில் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை. கூட்டாட்சி அரசமைப்பைக் கொண்ட நமது நாட்டில், மாநிலங்களுக்குக் கிடைக்கின்ற அடிப்படையான நிதி ஆதாரங்களுக்கும், மாநிலங்களின் கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றிற்கும் இடையே சமன்பாடற்ற நிலை தான நிலவிவருகிறது. இந்தச் சமன்பாடற்ற நிலையை முடிந்தவரையில் குறைப்பதற்கு, ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரையும்கூட உதவ முன் வரவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலையை உணர்த்துவதாகும். மாறியுள்ள பொருளாதாரச் சூழ்நிலையில், மாநிலங்களின் பங்கு மேலும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த முக்கியத்துவத்திற்கிணங்க, மத்திய, மாநில நிதி உறவுகள் முழு அளவில் மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.

6. ''மத்தியிலே வலிவான கூட்டாட்சி. மாநிலத்திலே வளமான தன்னாட்சி'' என்ற தத்துவத்திற்கு ஏற்ப, இந்தியாவைக் காப்பாற்றுவதற்கேற்ற அதிகாரங்கள் மத்திய அரசிடமும் மக்களை வாழ வைப்பதற்கு ஏற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமும் அமைய அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

7. தொழில் வளர்ச்சி, ஏற்றுமதி முயற்சி ஆகியவற்றுக்கு உதவுவதில், முக்கியப் பங்கு மேற்கொள்ளுமாறு மாநிலங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. ஆனால், நிறுவன வரியில் ஒரு சிறு பகுதியும் கூட மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலையாகும். இந்த வரியில் ஒரு நியாயமான வீதாச்சார அளவை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். சரக்கு ஒப்படை வரி விதிப்பதற்கான சட்டம் ஒன்றினை இயற்றுமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, நமது மாண்புமிகு முதல்வர் கடிதம் எழுதியுள்ளார். நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் இந்த வரி விதிப்புக்கு வகை செய்யும் சட்ட முன் வடிவு ஒன்றைக்கொண்டுவருமாறு நாம் மீண்டும் மத்திய அரசை வலியுறுத்த விரும்பியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. இம்மாநிலத்தின் நிதிவாயில்களை வலுப்படுத்த விரும்புகின்ற வேளையில், மத்திய நிதி அமைச்சர் வரவு—செலவுத் திட்டத்தில் சிறுசேமிப்புத் தொடர்பாகச் செய்துள்ள அண்மைய அறிவிப்பு இம்மாநிலத்திற்குக் கடுமையான பின்னடைவு ஏற்படுத்தியுள்ளது. மாநிலங்கள் தங்களுடைய திட்டப்பணிகளுக்கும், வளர்ச்சிப்பணிகளுக்கும் சிறுசேமிப்பு நிதியைப் பெரும் அளவிலான நிதி வாயிலாக நம்பிக்கொண்டிருக்கும் நிலையில் உள்ளன. சேமிப்பைக் குறிப்பாக சிறு சேமிப்பைப் [illegible]

[illegible]குரிய விதிகளை நீக்குவது, சிறு சேமிப்பு வசூலை வெகுவாக [illegible]தில் போய் முடியும். சேமிப்புக்கான எஞ்சிய விதியிலுங் [illegible] அதிக ஆதாயத்தைத் தரக்கூடிய ஏனைய சேமிப்புத் [illegible]களுடன் சிறு சேமிப்பு போட்டியிடவேண்டியுள்ளது. [illegible]லையைச் சரிசெய்யுமாறும் சிறு சேமிப்பினை அதிக அளவு [illegible]ச்சிகரமாக்கவும், அதன் வாயிலாக மாநிலத்தின் நிதி [illegible]களைப் பாதுகாக்கவும் நாம் மத்திய அரசை வலியுறுத்து வோம்.

## எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்.

9. 1990 ஏப்ரல் திங்கள் முதல் நாளில் தொடங்கும் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்த எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்வதில், காலத்தாழ்வு ஏற்பட்டுள்ளது என்பதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். தேசிய வளர்ச் சிக்குழு, 1991 டிசம்பர் திங்களில் கூடி, 1992 ஏப்ரல் முதல் நாளிலிருந்து தொடங்கும் என்று முடிவு செய்யப்பட்ட எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கைக்கு, இறுதி வடிவம் கொடுத்தது. நமது முதலமைச்சர் அவர்களுக்கும், மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களுக்கும் இடையில் அண்மை யில் நடைபெற்ற கலந்துரையாடலில் 1992–93 ஆம் ஆண்டுத் திட்டம் மட்டும் இடம் பெற்றது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இன்னும் முழுமையாக விவாதிக்கப்படவில்லை. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியை நாம் எதிர்கொண்டு சமாளிக்கும் வேளையில் நம்முடைய நீண்ட கால நோக்கங் களான, உற்பத்தி பெருக்கம் பெறுதல், வேலைவாய்ப்பின் மையைக் குறைத்தல், ஏழ்மை நிலையை ஒழித்தல் போன்ற வற்றைப் புறக்கணித்துவிடக்கூடாது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முழுமையாக வகுப்பது குறித்து மத்திய திட்டக்குழு விரைவில் பரிசீலிக்கும் என்று நம்பப்படுகிறது.

## நிதி நிலைமை.

10. இந்த அரசு பதவி ஏற்றபொழுது எதிர்கொள்ள வேண்டி இருந்த, முன்பு எப்பொழுதும் கண்டிராத நிதி நிலை நெருக் கடியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். திட்டத்திற்கு ரூ. 1,600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய நிலையில் ரூ 1,220 கோடி அளவிற்குப் பெரும் பற்றாக்குறையை அரசு எதிர்நோக்க வேண்டியிருந்தது. திட்டத் [illegible] முழுச் செலவையும் ஏற்று, 'வளர்ச்சி நிலைக்கு வழிகோலு வதா அல்லது தேக்க நிலையிலேயே நிற்பதா' என்ற இக்கட் டான நிலையில் இரண்டிலொன்றை இந்த அரசு தேர்ந்தெடுக்க [illegible]. உண்மையில், நடப்பு ஆண்டிற்கான திட்ட [illegible] குறைத்துக் கொள்வது என்கின்ற எளிய வழியை [illegible] தேர்ந்தெடுத்திருக்க முடியும். ஆனாலும், அப்படிச் செய்வது



நமது வளர்ச்சிப் பணி ஒதுக்கீடுகளில் மிக கடுமையான வெட்டு களைச் செய்வதாக அமைந்துவிடும், ஆகவேதான், அந்த எளிய வழியைப் பின்பற்றாமல் நாம் கடுமையான வழியைத் தேர்ந் தெடுத்துக் கொண்டோம். அதாவது 1991–92 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு, ரூ. 1,600 கோடியில் எவ்விதப் பற்றாக்குறையும் ஏற்படாமல் செயற்படுவதற்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவது, இழப்புக்களை நீக்குவது என்கின்ற கடுமையான வழிகளைத் தேர்ந்தெடுத்தோம்.

11. மிகக்கடுமையான நிதி நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதில், இவ்வரசு குறிப்பிடத்தக்க சாதனையைப் புரிந் துள்ளது என்பதை, உறுப்பினர்கள் அனைவரும் புரிந்து கொண்டு போற்றுவார்கள் என்பதில் ஐயம் எதுவுமில்லை. வல்லுநர்கள் பலரும் நிதிச்சீர்குலைவு ஏற்படும் என்றும், திட்ட ஒதுக்கீட்டில் பெருமளவில் குறைவு நேரும் என்றும் கணித்துக் கூறினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெய லலிதா அவர்களின் திறமையான நிருவாக நெறியில் நின்று, உறுதியான நடவடிக்கைகளை எடுத்து, அதன் பயனாக நிதிச் சீர்குலைவு நிலைமையைத் தவிர்த்துள்ளோம் என்றும், 1991–92 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை எவ்விதக் குறைவும் இன்றிச் செயற்படுத்தியுள்ளோம் என்றும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதொன்றையும் செய்ய முடியாத கடுமையான நிதி நெருக்கடி நிலைமை நிலவிய காலத்தில் இவ்வரசு பதவி யேற்றிருந்த போதிலும், மத்திய அரசிடமிருந்து எவ்விதச் சிறப்பு உதவியையும் நாம் பெறவில்லை என்பது இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

12. நமது அரசை எதிர்நோக்கியிருந்த பல்வேறு நிதிப் பிரச்சினைகளை நாம் சமாளித்து வந்துள்ளோம். இன்னும் சில பிரச்சினைகள் எஞ்சிநிற்கின்றன. இவை குறித்து நாம் துணிந்து சில நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். ஏழை, எளிய மக்கள், வசதி வாய்ப்பற்றவர்கள் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் குறித்து மிகுந்த அக்கறை கொண்டு, அந்த நோக்கிலே அமைந்த திருத்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

## ஆண்டுத் திட்டம்

13. நம் நாட்டில் ஒட்டு மொத்தமான பொருளாதார நிலைமை, நமது பணியை மிகவும் கடுமையாக்கியுள்ள போதி லும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிப்ப தென நாம் முடிவு செய்துள்ளோம். 1991–92-ல் ரூ. 1,600 கோடிக்கான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு அளவை நிறைவேற்ற நாம் எடுத்த உறுதியான நடவடிக்கைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டு [illegible] கீட்டு அளவை முழுமையாக எய்துவோம் என நாம் [illegible]

நம்புகிறோம். 1992–93 ஆம் ஆண்டுக்குரிய உயரளவு திட்ட ஒதுக்கீட்டு அளவைப் பெறுவதில் இம்மாநிலம் அடைந்துள்ள இடர்பாடுகளை உறுப்பினர்கள் அறிவர். தமிழ்நாட்டின் மிகவும் இக்கட்டான நிதி நிலைச் சூழலில், வரும் ஆண்டில் தமிழ்நாடு குறைவான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டு அளவை ஏற்க வேண்டுமென்று மத்திய திட்டக்குழு தெரிவித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அதனை ஏற்க மிக உறுதியாக மறுத்துவிட்டார். மாண்புமிகு முதலமைச்சருடைய அயராத தனிப்பெரும் முயற்சிகளின் காரணமாக, 1992–93-இல் அதிகத் திட்ட ஒதுக்கீடு வேண்டும் என்கிற தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கை, இறுதியாக, மத்திய திட்டக் குழுவால் ஏற்கப்பட்டது. 1992–93 ஆம் ஆண்டிற்கு ரூ. 1751 கோடி அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு எடுத்த பெரும் முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே நன்கு அறிவர்.

## காவல் துறை

14. நமது சமுதாயத்தின் நெருக்கமாகப் பின்னியமைந்துள்ள வலிமையான கட்டுக்கோப்பினை உடைத்துத் தகர்க்க முயலும் தீய சக்திகளுக்கு எதிராக, நம்மைக் காத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்திட, காவல் துறைக்குப் புத்துணர்ச்சியும், புதிய தெம்பும், ஊக்கமும் தரப்பட்டுள்ளன. காவல் துறையை நவீனப்படுத்தும் செயல்முறையை நாம் தொடர்ந்து செயற்படுத்துவோம். நமது மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை எப்போதும் பேரார்வத்துடன் காக்கும் காப்பாளராகக் காவல்துறை விளங்க வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காகவே, காவல்துறைச் சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15. இந்த வரவு செலவுத்திட்டத்தில் காவல் படைக்காக ரூ. 276.31 கோடி மொத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 80.45 கோடி செலவில் காவல் படையை நவீனப்படுத்தும் விரிவான திட்டம் ஒன்றினுக்கு உதவி அளிக்க நாம் மத்தி அரசை அணுகியுள்ளோம். மத்திய அரசு இதுவரை ரூ. 10 கோடி அனுமதித்துள்ளது. முதல் கட்டப்பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி கிடைக்குமென நாம் நம்புகிறோம்.

16. சீருடைப் படைகளுக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் பணியை முறையாக நடத்த உறுதி செய்யும் வகையில், சீருடைப் படையினர் தேர்வு வாரியத்தை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம்.





17. காவலர் வீட்டுவசதி வாரியத்தை நாம் புதுப்பித்துள்ளோம். காவல் படைக்காக 1,000 குடியிருப்புக்களைக் கட்டும் பணியை அவ்வாரியம் மேற்கொண்டுள்ளது. வரும் ஆண்டில் கூடுதலாக 1,000 குடியிருப்புக்களை அவ்வாரியம் கட்டும்.

## வேளாண்மை.

18. நடப்பாண்டில், அரிசி உற்பத்தியும், ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தியும், இதற்குமுன் இருந்திராத வகையில் உயர் அளவில் இருக்குமென்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள். இத்தகைய சிறப்பான சாதனை, அரசு அளித்த முழு ஆதரவுடன் உழவர்கள் மேற்கொண்ட முயற்சிகளினால்தான் நடைமுறையாகியுள்ளது. வேளாண்மையும், அது சார்ந்த பணிகளுக்குமான திட்ட ஒதுக்கீடு, நடப்பாண்டிற்கு இருந்த ரூ. 187.53 கோடி என்ற அளவிலிருந்து, வரும் ஆண்டிற்கு ரூ. 215.75 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

19. நிரந்தரமான தரிசு மற்றும் கரம்பு நிலங்களைச் சாகுபடியின்கீழ்க் கொண்டு வருவதற்கான புதிய திட்டம், குறித்தவாறு உடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 1992 ஜனவரி வரை, 6,500 ஏக்கர் பரப்பளவு நிலம், இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், இத்திட்டத்தை, ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கத்தில், 12,500 ஏக்கர் பரப்பளவு நிலங்கள் பயனடையும் வகையில் நீட்டிக்கக் கருதியுள்ளோம்.

20. உலக வங்கி ஆதரவுடன், தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தை, மொத்தம் ரூ. 309.29 கோடி செலவில் செயல்படுத்தி வருகிறோம். இந்த விரிவான திட்டம், வேளாண்மையையும், அது தொடர்பான பணிகளையும் உள்ளடக்கியதாக அமையும். இத்திட்டம், தரமான விதைகளை உற்பத்தி செய்யவும், விரிவாக்கப் பணிகளை முறையாக மேற்கொள்ளவும், புதிய தொழில்நுட்ப உத்திகளைக் கையாளவும் வகை செய்யும்.

21. நெல்லை—கட்டபொம்மன், வ. உ. சிதம்பரனார் மாவட்டங்களில், 'டேனிடா' உதவியுடன் விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இது போன்றதொரு திட்டம், வரும் ஆண்டில் இராமநாதபுரம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், காமராஜர் ஆகிய, மாவட்டங்களில் ரூ. 10.50 கோடி செலவில் 'டேனிடா' நிதியுதவியுடன் தொடங்கப்படும்.

22. பாசனத்திற்கு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுப்பினர்கள் அறிவர். சொட்டுநீர்ப் பாசன முறையையும், தெளிப்புநீர்பாசன முறையையும் எல்லோரும் அறிய விளம்பரப் படுத்துவோம்.

இப்பாசன முறை, அனைத்துப் பயிர்களுக்கும், குறிப்பாக எண்ணெய் வித்துக்கள், மற்றும் தோட்டப்பயிர் வளர்ப்பு ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து விளம்பரப்படுத்தப்படும். வரும் ஆண்டில் இத்தகைய பாசன முறைகளை மேற்கொள்ள உழவர்களுக்கு உதவித்தொகை அளிக்க ரூ. 1.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

23. வானவாரிப் பகுதிகளுக்கான நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத் தேசியத்திட்டம், 14 மாவட்டங்களில், 84 வளர்ச்சி வட்டாரங்களில், நடப்பாண்டில் தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 4 ஆண்டுத் திட்டத்தில் பொருத்தமான சாகுபடி ஏற்பாட்டுடன், 2.25 இலட்சம் ஏக்கர் பயனடையும். இதற்கான மொத்த திட்டச் செலவு ரூ. 35.61 கோடியாகும்.

24. 'டேனிடா' நிதியுதவியுடன் கூடிய, வேளாண்மைத் தொழிலில் மகளிர்க்குப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று வடஆர்க்காடு—அம்பேத்கார், சேலம், தருமபுரி, பெரியார், திருச்சி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 6 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படும். இந்த 8 ஆண்டுத் திட்டம் ரூ. 18 கோடி மொத்தச் செலவில் ஒவ்வோர் ஆண்டும் 9,000 மகளிர்க்கு மேம்பட்ட வேளாண்மை நடைமுறைகளில் பயிற்சி அளிக்க வகை செய்கிற முறையில் இருக்கும்.

25. நாட்டில் சமையல் எண்ணெய் பற்றாக்குறையாக உள்ளதை உறுப்பினர்கள் அறிவர். சமையல் எண்ணெயின் விலை உயராமல் தடுக்க பாமாயில் எண்ணெயை நாம் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. உள்நாட்டில் கிடைக்கக் கூடிய சமையல் எண்ணெயின் அளவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. இம்மாநிலத்தில் எண்ணெய் தரும் பனை மரங்களை வளர்ப்பதற்கான ஒரு திட்டத்தை மொத்தம் ரூ. 24.89 கோடி செலவில் மேற்கொள்ளக் கருதியுள்ளோம். இந்தத் திட்டம், மத்திய அரசு மற்றும் வணிக வங்கிகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

26. தமிழ்நாட்டில், குறிப்பாக நீர்வளம் பற்றாக்குறையாக உள்ள நிலையில், உணவு தானிய உற்பத்தியைக் குறித்து தொலைநோக்கு வேண்டுமெனில், நவீன தொழில்நுட்ப உத்திகளை நாம் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. உயிரியல் தொழில்நுட்பம் என்பது, அளவிறந்த பயனளிக்க உறுதி தருகின்ற இப்போதைய புதியதொரு களமாகும். மாவட்ட உயிரியல் தொழில்நுட்பப் பயன்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க, நாம் முடிவு செய்துள்ளோம். அதன்மூலம், உயிரியல் இரசாயன உரங்கள், உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் பல்வேறு புதிய முயற்சிகள், வேளாண்மையின் நிலைத்த வளர்ச்சிக்கு உறுதி செய்யும் வகையில் பயன்படுத்திக் கொள்ளப்படும்.





27. தமிழ்நாட்டில் தோட்டக்கலை மேம்பாடு என்பது, ஒரு பெரிய வளர்ச்சிக்கான பகுதியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். 100 சதவீத ஏற்றுமதி நோக்கத்துடன் கூடிய தோட்டக்கலை எஸ்டேட்டுகளைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். இந்த எஸ்டேட்டுகள், தொழில்களுக்கு அளிக்கப்படும் அனைத்துச் சலுகைகளையும் பெறும்.

## பாசனம்.

28. காவிரி நீர்ப் பங்கீட்டுத் தகராறு குறித்த நிலைமையை உறுப்பினர்கள் நன்கு அறிவர். உச்ச நீதிமன்றம் உறுதி செய்தவாறு, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்ற வேண்டுமென்கிற தமிழ்நாட்டின் நிலையை, மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பாரதப் பிரதமர் அண்மையில் கூட்டிய கூட்டத்தில் மிகத் தெளிவான முறையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் (மேசையைத் தட்டும் ஒலி). நாம் அந்நிலையைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

29. தமிழ்நாடு தனது மேற்பரப்பு நீர் ஆதாரங்களை முழுவதுமாகப் பயன்படுத்தியுள்ளது. வெளி நிதியுதவியுடன் ரூ. 310 கோடி செலவில் நடுத்தர, சிறு பாசனக் கூட்டுத் திட்டம் ஒன்றை, நாம் தயாரித்துள்ளோம். அத்திட்டத்திற்கான இசைவினை எதிர்பார்த்து, மேற்சொன்ன திட்டங்கள் அனைத்தின் தொடக்கப் பணிகளையும் மேற்கொள்ள நாம் முடிவு செய்துள்ளோம்.

30. ரூ. 28.70 கோடி செலவில் காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடிக்கருகே வைப்பாற்றின் குறுக்கே, புதிதாக நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஒன்றை, நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம். இத்திட்டம், 9,156 ஏக்கருக்குப் பாசன வசதிகளை அளிப்பதுடன், 627 ஏக்கருக்கு பாசன வசதியினையும் உறுதி செய்யும். மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் 18—வது கால்வாய் குறித்த விரிவான ஆய்வுப் பணியினை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

31. சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் 75 பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மொத்தம் ரூ. 3.55 கோடி செலவில், வரும் ஆண்டில், 19 புதிய திட்டங்களை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

32. ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டப் பணியைப் பொறுத்த

இரண்டாம் கட்டப் பணிகள், வட ஆர்க்காடு—அம்பேத்கார், தென்னார்க்காடு, செங்கை—எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, மதுரை, திண்டுக்கல்—அண்ணா, திருவண்ணாமலை—சம்புவராயர், திருநெல்வேலி—கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்திட்டத்தின்கீழ், மொத்தம் 50,000 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 150 பெரிய ஏரிகள் பயன்பெறும். இத்திட்டத்தின்கீழ், 5,000 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்ட 80 சிறிய ஏரிகளுக்கும் பாசனம் அளிக்கும் பணி மேற்கொள்ளப்படும். இந்திட்டத்திற்காக 1992–93–ல், ரூ. 19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

33. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்திற்காக ரூ. 17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சேத்தியாதோப்பு, மருதாநதித் துணைத் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வருமாண்டில் ரூ. 5.13 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழுதூர் பொறிமதகு திட்டம் மேற்கொள்ளப்படும். திருக்கோவிலூர் அணைக்கட்டுப் பாசனத் திட்டம், எல்லீஸ் சத்திரம் அணைக்கட்டுப் பாசனத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், நெடுங்கால் அணைக்கட்டுப் பாசனத் திட்டம் ஆகிய திட்டப் பணிகள் அடங்கிய துணைத் திட்ட ஆய்வுப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

## காட்டு வளம்

34. நாம ஆண்டுதோறும் சுமார் 62,500 ஏக்கர் வனப் பகுதிகளை இழந்து வருகிறோம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே 15.625 லட்சம் ஏக்கர் நிலங்களை நாம் இழந்து விட்டோம். இந்நிலைமையைச் சீர்செய்யப் பெரும் திட்டப் பணிகளை மேற்கொள்வதென முடிவு செய்துள்ளோம். இந்த ஆண்டில் சுமார் 1,62,500 ஏக்கரில் காடுகள் வளர்ப்புப் பணியை மேற்கொண்டுள்ளோம். வரும் ஆண்டில், மொத்தம் ரூ. 47.65 கோடி செலவில். பல்வேறு காடு வளர்ப்புத் திட்டங்களின்கீழ் 1,70,000 ஏக்கரில் காடுவளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். மிக அதிக நிலப்பரப்பில் காடு வளர்ப்பை மேற்கொண்ட திட்டங்களில் இதுவே மிகப் பெரியதாகும்.

35. சுவீடன் நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு வளர்ச்சி முகவரமைப்பின் (SIDA) நிதியுதவி பெற்றுள்ள சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் II-வது கட்டப்பணி, மொத்தம் ரூ. 85.40 கோடி செலவில் நடந்தேறி வருகிறது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 22.85 கோடியாகும். இத்திட்டத்தின் III-வது கட்டப்பணிக்கு, ரூ. 1.70 கோடி ஒதுக்கீடு உடைய திட்டத்தை, சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி முகவரமைப்பின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளோம். இப்புதிய திட்டத்தின் கீழ் சுமார் 2.5 இலட்சம் ஏக்கர் நிலத்தில் காடு வளர்க்கக் கருதப் பட்டுள்ளது. வண்டலூரில் மாநில வன ஆராய்ச்சி நிறுவனம் ஏற்படுத்துவது பற்றிய பணியை, நாம் ஏற்கனவே தொடங்கி விட்டோம். இச்செயல் நோக்கத்திற்காக, வரும் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் III-வது கட்டப் பணியில் இந்நிறுவனத்தை அமைக்கும் பணியையும் சேர்ப்போம்.





36. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், ரூ. 60.00 கோடி ஒதுக்கீட்டுடன், 7,500 ஏக்கரில் தேயிலையைப் பயிரிடும் புதிய பெரும் திட்டப் பணி ஒன்றைத் தொடங்கியுள்ளது. வரும் ஆண்டில், 1,500 ஏக்கரில், தேயிலையைப் பயிரிடுவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

37. புதிய ரகக் காகிதக்கூழ் மரங்களை 75,000 ஏக்கரில் வளர்க்கும் பெரும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த, நிதியுதவி பெறப்பட்டுள்ளது என்பதை அறிவதில், பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள். இத்திட்டம், 6 ஆண்டுக் காலத்தில், மொத்தம் ரூ. 84.73 கோடி செலவில் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் 12,500 ஏக்கர் நிலத்தில் மரம் வளர்க்கக் கருதப் பட்டுள்ளது.

38. சந்தன மரக் கடத்தலைக் கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். நவீன ஆயுதங்கள் துப்பாக்கிகள், செய்தித் தொடர்பு சாதனங்கள், மோட்டார் வண்டிகள் ஆகியன வாங்குவதற்காக ரூ. 65 இலட்சம் ஒதுக்கியுள்ளோம். சிறப்புப் பரிசுகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் உயர்த்தியுள்ளோம். காடுபடு பொருள்கள் தொடர்பான குற்றங்களை, குறிப்பாக சந்தனமரக் கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிக்கக்கூடிய தனி நீதி மன்றம் ஒன்று (மேசையத்தட்டும் ஒலி.) திருப்பத்தூரில் விரைவில் அமைக்கப்படும்.

39. காடு வளர்ப்பு பணிகளை அரசு மட்டுமே மேற்கொண்டால் போதுமானதாக அமையாது. இப்பணியில் மக்களையும் முழுமையாக ஈடுபடுத்த வேண்டியிருக்கிறது. இவை தவிர, பெரும் அளவில் குறிப்பாக, காடுகள் வெட்டி அழிக்கப்பட்ட பகுதிகளில், மரங்களை வளர்க்கும் பணியைமேற்கொள்வதில் உழவர்களை ஊக்கப்படுத்த வேண்டியுமிருக்கிறது. அவ்வாறு மரங்கள் வளர்ப்பதற்காகவும், தனியார் நிலங்களில் காடுகள் வளர்க்கும் திட்டப் பணிகளுக்காகவும், 1992-93ல், மொத்தம் ரூ. 1.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

40. நிலை நிறுத்தக் கூடிய மாவட்டக் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்குவதென, நாம் எடுத்துள்ள முடிவு குறித்து பேரவை உறுப்பினர்கள் பெரிதும் மகிழ்வார்கள். ஒவ்வொரு மாவட்டமும், தேவைப்படும் விறகு மரங்களை வளர்த்துத் தனது தேவையைத் தானே நிறைவு செய்து கொள்ளச் செய்வதே, இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம் மூத்தண், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மதுரை, வட ஆர்க்காடு அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்படும்.

## கால்நடைச் செல்வம்.

41. கால்நடைகளுக்குச் சிறந்த மருத்துவப் பணிவசதிகள் அளிக்கவும், கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தவும், நாங்கள் மிகவுயர்ந்த முன்னுரிமை வழங்க முடிவு செய்துள்ளோம். ரூபாய் 1 கோடி செலவில் எஞ்சியுள்ள 1127 கால்நடை மருந்தகங்களுக்கும், துணை மையங்களுக்கும் உறைவிந்துப் பணிவசதிகள் அளிக்கும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1992 ஜூன் திங்கள் 30 ஆம் நாளுக்குள் முடிக்கப்படும். ஒசூரிலும்: ஈச்சங்கோட்டையிலும் உள்ள உறை விந்து உற்பத்தி செய்யும் வசதிகள், ரூ. 2·68 கோடி செலவில் விரிவு படுத்தப்படவுள்ளன. மாவட்டத் தலைமையிடங்களில் உறை விந்து வங்கிகளை ஏற்படுத்தி, உறைவிந்து வழங்கும் முறையை நாங்கள் திருத்தியமைத்துள்ளோம். உலக வங்கியின் உதவியுடன் கால்நடை மருத்துவப் பணிகளின் மேம்பாட்டிற்காகவும், கால்நடைகளின் தரம் உயர்த்தும் திட்டங்களுக்காகவும், 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 2.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

42. ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 10 கால்நடை மருந்தகங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 1992-93 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 1.25 கோடி செலவில் 400 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம் வரும் ஆண்டிலேயே புதிய மருந்தகங்கள் 400-ம் ஏற்படுத்தப்படும். கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கும் இந்தப் பேரளவிலான முயற்சியினை அவையின் உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்று நம்புகிறேன். குளிர்சாதன வசதி செய்யப்பட்ட நடமாடும் வேன்கள் வழங்கி, மருந்துப் பொருட்கள் வழங்கும் முறை வலுப்படுத்தப்படும். இராணிப்பேட்டையில் உள்ள, கால்நடை மருந்துகள், நோய்த் தடுப்பு மருந்துப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான வசதிகள் மொத்தம் ரூ. 1.12 கோடி செலவில் வலுப்படுத்தப்படும்.

43. பதினெட்டு இலட்சம் உழவர்கள் பயனடையும் வகையில், பால், பால்படு பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் வகுக்கப்பட்ட





பால்பெருக்கத் திட்டம் I'I என்ற திட்டம், மொத்தம் ரூ. 62.2 கோடி செலவில், 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட புதிய பால் பண்ணை ஒன்று, சோழிங்கநல்லூரில் கட்டப்பட்டு வருகிறது. பாலின் விலையைத் திருத்தி அமைத்ததன் விளைவாக, உழவர்களுக்கு பாலுக்கு அதிகவிலை கொடுக்க முடிந்தது. எருமைப் பாலின் விலை, ஒரு கிலோ கொழுப்புச் சத்திற்கு ரூபாய் 65 லிருந்து ரூபாய் 90 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பால் உற்பத்தி குறையும் கோடை காலங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைக்க நாங்கள் உறுதி அளிப்போம். கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் வழங்கியுள்ள உழவர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைகளைக் கொடுத்துத் தீர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு, ஆதரவு தரும் வகையில் அரசு ரூ. 10 கோடி உதவி வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.).

44. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தின் நிதியுதவியுடன், சேலம், தருமபுரி, தென்னார்க்காடு, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். வடார்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில், மொத்தம் ரூ. 13.67 கோடி செலவில், செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடைகளின் தரத்தை உயர்த்த "டேனிடா" உதவி பெறும் திட்டம், மொத்தம் ரூ. 4.4 கோடி செலவில், புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## மீனளம்.

45. வரும் ஆண்டில் 2500 ஏக்கர் உவர் நீர்ப் பரப்பில், இறால் வளர்க்க நாம் திட்டமிட்டுள்ளோம். தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், இறால் மீன் வளர்ப்புத் தொழிற்பேட்டை ஒன்றைச் சிதம்பரனார் மாவட்டத்தில் நிறுவ இருக்கிறது. மொத்தம் ரூ. 7.2 கோடி செலவில் 222 ஏக்கர் நிலப் பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். பெரிய தொழில் நிறுவனங்கள் பெரிய அளவில் இறால் வளர்ப்புப் பண்ணைத் திட்டங்களை நிறுவுவதற்கு ஊக்கம் அளிக்கப்படும்; அதே சமயத்தில், சிறிய அளவில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்கின்ற கொள்கையையும் நாங்கள் பின்பற்ற இருக்கிறோம். நன்னீர் இறால் குஞ்சு பொரிப்பு நிலையங்களை நிறுவும் முன்னோடித் திட்டம் ஒன்றையும் நாம் மேற்கொள்ளுவோம்.

46. புதிய ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனளத் திட்டம் ஒன்றை, ரூ. 15.88 கோடி செலவில், நாம் இறுதி செய்துள்ளோம். புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீனளக் கூட்டுறவு இணையம் இத்திட்டத்தைச் செயற்படுத்தும். இத்திட்டத்தின்கீழ் 34 கடலோரக் கிராமங்களில் வசிக்கின்ற 6050 மீனவர்களுக்கு, மீன்பிடி படகுகள், வலைகள், படகுக்கு உள்ளேயும், படகின் வெளியேயும் பொருத்தப்படும் எஞ்சின்கள் முதலானவை வழங்கப்படும்.

47. மீன் குஞ்சுகள் உற்பத்தியையும், வழங்கலையும் உயர்த்த நாம் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். தமிழ்நாட்டின் ஆண்டுத்தேவை 17 கோடி மீன் குஞ்சுகள் ஆகும்; இவற்றில் நம்முடைய பற்றாக்குறை ஆண்டுக்கு 11 கோடி மீன்குஞ்சுகள் ஆகும். மீனவர்களும், மீன்குஞ்சு வளர்ப்பை மேற்கொள்ள, அவர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளோம். வரும் ஆண்டில், தேவையை முழுவதுமாக நிறைவு செய்ய இயலும் என்று எதிர்பார்க்கிறோம்.

48. மீனவர் வாழ்க்கைத் தரத்தை மேற்படுத்தும் பணிகளையும் மேற்கொண்டுள்ளோம். மீனவர்களுக்காக ரூ. 3·46 கோடி செலவில், 2,100 இலவச வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுபோல் இன்னும் 2,000 வீடுகள் வரும் ஆண்டில் கட்டப்படும். மீன் பிடிக்கச் செல்லும்பொழுது கடலில் இறக்க நேரிடும் மீனவர்கள் குடும்பத்திற்கு, இதுவரையில் குடும்ப கட்டுறுதி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த தொகை, ரூ. 15,000 இனி ரூ. 21,000 ஆக (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தி வழங்கப்படும். மீன்பிடித் தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில், மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ. 60 மாதம் ஒன்றுக்கு ரூ. 270 ஆக (மேசையைத் தட்டும் ஒலி) உயர்த்தப்படுகிறது.

## கல்வி.

49. இந்த வரவு செலவுத் திட்டத்தில், பொதுக்கல்வி, தொழில் நுட்பக் கல்விக்காக மொத்தம் ரூ. 15·18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், திட்ட ஒதுக்கீடான ரூ. 70.61 கோடியும் அடங்கும்.

50. ஒட்டுமொத்த நிதிநிலையைக் கருதிப்பார்க்கையில் கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்களைப் பள்ளிக் கல்விக்கு, குறிப்பாகத், தொடக்கக் கல்விக்குப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்த மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படக்கூடிய



ரூ. 62.47 கோடி செலவிலான திட்டமொன்றை வகுத்துள்ளோம். இத்திட்டம், மூன்று ஆண்டுக்கால அளவில் செயல்படுத்தப்படக் கூடியதாகும். இத்திட்டம், ஒவ்வொரு தொடக்கப்பள்ளியிலும், குறைந்தது மூன்று ஆசிரியர்கள் இருப்பதை உறுதி செய்யும். இத்திட்டத்தின்கீழ்ப் போதுமான அளவிற்குக் கட்டிட வசதிகளும் கல்வித் துணைச் சாதனங்களும் வழங்கப்படும்.

51. ஏழு ஆண்டுக்கால அளவில், ரூ. 1200 கோடி செலவில் செயல்படுத்தப்படக்கூடிய விரிவான பள்ளிக்கல்வித் திட்டம் ஒன்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உதவுமாறு உலக வங்கியை அணுகியுள்ளோம்.

52. உடனடி நடவடிக்கையாக, 459 ஓராசிரியர் பள்ளிகள் அனைத்திலும் இரண்டாவது ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டவையும், 1 கி.மீ. சுற்றளவிற்குள் தொடக்கப்பள்ளி இல்லாதவையுமான 800 குடியிருப்புப் பகுதிகளில் புதிய பள்ளிகள் தொடங்கப்படும். கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர்களுக்காக, மொத்தத்தில் 1,400 இடைநிலை ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

53. வரும் ஆண்டில், 20 உயர்நிலைப்பள்ளிகள், 10 மேல்நிலைப்பள்ளிகள் தொடங்கப்படும். ஏற்கெனவே வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து நிதியுதவியைத் திரட்டி, ரூ. 3 கோடி மொத்தச் செலவில் 64 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணியை மேற்கொண்டுள்ளோம். கூடுதலாக ரூ. 3 கோடி செலவில், மேலும் 64 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். 1375 பள்ளிகளில், கூடுதல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில், வாழ்க்கைத் தொழில்கல்வி முறை, படிப்படியாக மேம்படுத்தப்படும். 50 மேல்நிலைப் பள்ளிகளில், அறிவியல் ஆய்வுக்கூடங்களை ஏற்படுத்திச் சாதனங்களை வாங்கி வழங்க ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளோம்.

54. உயர்கல்விக்கு நிதி ஒதுக்குவது என்பது நமக்கு மிகவும் இடர்பாடானதாக உள்ளது. ஆகையால், இத்தகைய கல்விப் பணிக்கு உரிய செலவுத் தொகையில், ஓரளவுத் தொகையையாவது திரும்ப வசூலிப்பது இன்றியமையாததாகிறது. இந்த அதிகரித்து வரும் செலவுத் தொகையை ஓரளவிற்காவது சரிக்கட்ட, உயர் கல்விக்கான கட்டணங்களில் சில மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியமாகும். நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், உலகவங்கி நிதி உதவியுடன் ரூ. 76 கோடி செலவில், பல்தொழில் நுட்பப் பயிலகங்களை மேம்படுத்தும் திட்டமொன்றைத் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் மேம்பாட்டுப் பணிகள், மேற்கொள்ளப்படும்.

55. நடப்பாண்டில் 7 மாவட்டங்களில் முழு அளவு எழுத்தறிவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், இத்திட்டம் இராமநாதபுரம், திண்டுக்கல் அண்ணா, தஞ்சாவூர், நாகப்பட்டிணம் காயிதே மில்லத், சென்னை, கோயம்புத்தூர், பெரியார், தென்னார்காடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும். வரும் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 15.00 கோடியாக இருக்கும். இத்திட்டம், 1992-93ஆம் ஆண்டில், கூடுதலாக 25 இலட்சம் பேர்களுக்குப் பயன் அளிக்கும்.

56. மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விடும் நிலையை மாற்றிட, ''மாநிலப் பள்ளிசாராக் கல்வித் திட்டம்'' எனும் ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும் என்று நான் என்னுடைய சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் அறிவித்து இருந்தேன். இத்திட்டத்திற்கு உதவி நல்குமாறு மத்திய அரசை அணுகினோம். மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க இயலவில்லை. இத்திட்டத்தை நாமே செயல் படுத்துவது என்று முடிவு செய்துள்ளோம். இத்திட்டம் முழு எழுத்தறிவு இயக்கத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்படும். எனவே, இத்திட்டத்தையும் படிப்படியாகச் செயல்படுத்த வேண்டும். படித்துவிட்டு வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர்களுக்கு தற்பொழுது அளிக்கப்படும் நிவாரண உதவித் தொகைத் திட்டம் திருத்தி அமைக்கப்படும். இத்திட்டத்தில் படித்துவிட்டு வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலை அளிக்கப்படும். இத்திட்டத்தில் படித்துவிட்டு வேலை வாய்ப்பற்றிருக்கும் 1.5 இலட்சம் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இவர்கள் குடிப் பழக்கத்தின் கொடுமையை எடுத்துரைக்கும் பணியையும் மேற்கொள்வார்கள்.

57. நூலக இயக்கத்திற்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்க முடிவு செய்துள்ளோம். தற்போது, 2,465 பொது நூலகங்கள் உள்ளன. அதன்படி, 5000—க்கு மேல் மக்கள் தொகை கொண்டுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு பொது நூலகம் ஏற்படுத்தப்படும் என்கிற ஐந்தாண்டுத் திட்டமொன்றைத் தொடங்க உள்ளோம். பொது நூலகம் ஒவ்வொன்றிலும் அகராதி நூல்கள், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் கவிதைகள் முதலான இன்றியமையாத பொது நூல்கள் பலவும் வாங்கி வைக்கப்படும். 625 கிராமங்களில் இத்தகைய நூலகங்கள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 85 இலட்சமாகும். பகுதி நேர நூலகங்களுக்கு வரவேற்புள்ள இடங்களில், அத்தகைய பகுதி நேர நூலகங்களை ஏற்படுத்த ஊக்கம் அளிப்போம். வரும் ஆண்டில், 300 பகுதி நேர நூலகங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளோம். பொது நூலகங்களை மேம்படுத்துவதற்கான இத்திட்டத்திற்கு, நிதியுதவி



செய்யும் பொருட்டு, சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 5 காசு என்றுள்ள நூலகத் தீர்வையை, 10 காசாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. முழு அளவு எழுத்தறிவுத் திட்டமும், பொது நூலக இயக்கமும் நம் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்.

## தமிழ் வளர்ச்சி பண்பாடு.

58. புதிதாகப் பண்பாட்டு பழங்கலைகள் இயக்ககம் ஒன்றை நாம் தோற்றுவித்துள்ளோம். தற்போது, அந்த வகையில் இயங்கி வரும் அமைப்புகள் அனைத்தும், இந்த இயக்ககத்தின் கீழ் கொண்டு வரப்படும். இதன் மூலம் பல்வேறு பணித் திட்டங்களில் உரிய ஒருங்கிணைப்பையும், ஈடுபாட்டையும் ஏற்படுத்த இயலும்.

59. பண்டைத் தமிழர்கள் பெருங்கடல்களிடையே கலம் செலுத்திய மரபுகளுக்குச் சான்று பகரும் தொல் பொருள் தடயங்களை, அவை மூழ்கிக் கிடக்கும் இடங்களில் ஆய்வு நடத்திக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட கடல் அகழ்வாய்வுத்திட்டம், தேசியக் கடலியல் நிருவாகத்துடன் கூட்டாகச் சேர்ந்து, தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வரும்.

60. தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப்பல்கலைக் கழகத்தில், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக, 'இருக்கை' ஒன்று ஏற்படுத்தப்படும். தமிழ் இலக்கியத்திற்கும் பண்பாட்டிற்கும் அவர் ஆற்றிய அரும் பங்கினைக் குறித்து, இந்த இருக்கை ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்.

61. அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாகப் பயன் படுத்தப்படுவதற்கும் ஊக்கம் அளிக்கப்படும். அலுவலர்கள் தங்கு தடையின்றி எளிதில் தமிழைப் பயன் படுத்த உதவும் வகையில், இப்பணியில் ஆர்வம் கொண்ட, அரசு சார்பு அல்லாத நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்று, ஆங்கிலம் தமிழ், தமிழ் ஆங்கிலம் அகர முதலிகள் வெளியிடப்படும். இப்பெரு முயற்சியினை மேம்படுத்தும் வகையில், அண்மைக் காலத்தில் வழக்கில் வந்துள்ள சொற்களும் அகர முதலிகளில் இடம் பெறச் செய்யப்படும்.

62. வரும் ஆண்டில் கம்ப இராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் திட்டம் ஒன்று நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

63. தமிழ் இலக்கியத்தில் நிலவும் மிகச் சிறந்த படைப்புகளை [illegible] பெயர்க்க முன் வருகின்ற தமிழ் அறிஞர்களுக்கு அரசு உதவி புரிய முன்வரும்.

## சத்துணவு.

64. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, வரும் ஆண்டில் ரூ. 256.32 கோடி ஆகும். நடப்பாண்டில் இது ரூ. 235.94 கோடி ஆகும். இத் திட்டத்தை நாம் விரிவு படுத்தி, வலுப்படுத்தியுள்ளோம்.

65. இப்போது, 6 முதல் 24 மாதங்கள் வரையிலான குழந் தைகளுக்கும் கூடுதலான துணைச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இடருக்கு ஆட்படும் நிலையிலுள்ள கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தின் கீழ்ப் பயன் பெறுவர். விரிவுப்படுத்தப்பட்ட இத்திட்டத்தினால் 7 இலட்சம் குழந்தைகளும் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்களும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைவர். தற்போது விரிவு படுத்தப்பட்ட இத்திட்டம், 15 மாவட்டங்களில் செயல்படுகிறது. வரும் ஆண்டில் இத்திட்டம், தருமபுரி, தென்னாற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். சத்துணவுத் திட்டத்தில் கூடுதல் பணிகளுக்காக வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

66. இத்திட்டத்தின் கீழ் 2.45 இலட்சம் பகுதி நேரப் பணி யாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பணியாளர்கள், தங்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுக்குமாறு அரசை வலியுறுத்தி வந்துள்ளனர். பகுதி நேர அடிப்படையில் பணியாற்றும் இப் பணியாளர்கள் தற்போது 'வரையறுத்த ஊதியம்' பெறு கின்றனர். பகுதி நேரப் பணி ஆனதால் அவர்கள் அகவிலைப் படி பெறத் தகுதியுடையவரல்லர். விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டு, 1—4—92 முதல் மதிப்பூதியத்தில் தனி உயர்வு அளிக்க முடிவு செய்துள்ளோம். மாதம் ஒன்றுக்கு ரூ. 150—க்கு மேல் ஊதியம் பெறும் பகுதி நேரப் பணியாளர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 20-ம், மாதம் ஒன்றுக்கு ரூ. 150-க்கும் குறை வாக ஊதியம் பெறுபவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 10-ம் வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஓராண்டுக்கு ரூ. 4.00 கோடி கூடுதல் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

## சுகாதாரம் குடும்பநலம்

67. 'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற நல்வாழ்வுத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதன் வாயிலாக, 'அனைவர்க்கும் நல்வாழ்வு' என்கிற அரசின் கோட்பாட்டினைப் பொருள் பொதிந்ததாகச் செய்ய நாம் முயன்றுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2347 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன 14.54 இலட்சம் மக்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன ; மொத்தத்





தில் 10,000 முகாம்கள் நடத்தப்படும். இது இந்திய நாட் டிலேயே வேறு எங்கும் நடத்தப்படாத மிகப்பெரிய நல்வாழ்வுத் திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

68. சுகாதார மருத்துவப் பணிகளுக்கான மொத்த ஒதுக்கீடு, நடப்பாண்டில் உள்ள ரூ. 409.09 கோடியிலிருந்து ரூ. 463.66 கோடியாக வரும் ஆண்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மருந்துகள் மருந்துப் பொருட்களுக்கான நிதி ஒதுக்கம், வரும் ஆண்டில் ரூ. 46 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

69. கிராம அளவில், துணைச் சுகாதார நிலையங்களிலிருந்து தொடங்கி பெரிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை, மருத்துவ ஏற்பாட்டினைத் திறம்பட நடத்த வேண்டியது அவசியமானப்பணியாக அமைந்திருக்கிறது. உரிய கட்டுப் பாட்டு, நிருவாக வசதி குறித்து அதிக முக்கியத்துவத்தை நாம் அளித்துள்ளோம். கிராம அளவில் சத்துணவு, சுகாதார பணிகள் இரண்டும் முழுமையாக ஒருங்கிணைக்கப்படும். தற்பொழுது தொடக்கச் சுகாதார நிலையங்களின் மொத்த எண் ணிக்கை 1,505-ஐ அடைந்துள்ளது. நடப்பாண்டில் தொடக்கச் சுகாதார நிலைய அளவில் மருந்துகளுக்கான நிதி ஒதுக்கத்தை ஆண்டொன்றுக்கு ரூ. 30,000-லிருந்து ரூ. 40,000 ஆக நாம் உயர்த்தியுள்ளோம். இந்நிதி ஒதுக்கம், வரும் ஆண்டில் ரூ. 40,000-லிருந்து மேலும் ரூ. 50,000 ஆக உயர்த்தப்படும். இதற்காகும் கூடுதல் செலவு ரூ. 1.5 கோடியாக இருக்கும். ரூ. 9.41 கோடி செலவில் 159 தொடக்கச் சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 1.57 கோடி செலவில் 21 தொடக்கச் சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

70. குறைந்தது 32 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவ மனைகளை நிலை உயர்த்தும், ஏற்கெனவே அறிவித்திருந்த திட்டத்தின் கீழ், நடப்பாண்டில், ரூ. 1.25 கோடி செலவில் 14 மருத்துவ மனைகளில் கூடுதலாக 222 படுக்கைகள் வசதியினை அமைக்கும் பணியை நாம் மேற்கொண்டுள்ளோம். இத்திட்டத் தின் கீழ், வரும் ஆண்டில், ரூ. 1.56 கோடி செலவில் 14 வட்ட மருத்துவமனைகளில் 175 படுக்கை வசதியினை அமைக்கும் பணி யும் மேற்கொள்ளப்படும்.

71. அனைத்துத் தலைமையிட மருத்துவமனைகளிலும், படுக்கைகள் எண்ணிக்கையை குறைந்தபட்சம் 200 ஆக படிப் படியாக உயர்த்தும் திட்டம் குறித்தும், உறுப்பினர்கள் நன்கு அறிவர். வரும் ஆண்டில், சிவகங்கை, தருமபுரி ஆகிய இடங் களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், 24 படுக்கைகள் கொண்ட வார்டுகளைக் கட்டும் பணி மேற்

கொள்ளப்படும். அனைத்து மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளுக்கும், வரும் ஆண்டில், ''அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர்'' வசதி செய்து கொடுக்கப்படும். வட்ட, மாவட்ட மருத்துவ மனைகளுக்கு நோயாளர் ஊர்தி வசதித் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் 14 நோயாளர் ஊர்திகள் வழங்கப்படும்.

72. உலக வங்கி ஆதரவு பெற்ற இந்திய மக்கள் தொகைத் திட்டம் V, ரூ. 10.00 கோடி செலவில் 8 நகரங்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்படும். ரூ. 59.2 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் தருமபுரி, தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டங்களுக்குப் பயனளிக்கும் சுகாதாரப் பெருந் திட்டத்தை மேற்கொள்ள, ''டேனிடா'' நிதியுதவியை நாம் கோரியுள்ளோம்.

73. உலக வங்கி, அனைத்திந்திய அடிப்படையில் ''பார்வை யின்மைக் கட்டுப்பாட்டுப் பெருந்திட்டம்'' ஒன்றினுக்கு ஆதர வளிக்குமென நம்பப்படுகிறது. மொத்தம் ரூ. 44.23 கோடி செலவில் இதைச் செயல்படுத்துவதற்கு நாம் திட்டம் வகுத்துள் ளோம்.

74. டாக்டர் எம். ஜி. ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் திற்கு இடவசதி அளிக்க, ரூ. 1.1 கோடி செலவில், புதிய கட்டிட வளாகம் ஒன்று, வரும் ஆண்டில் கட்டப்படும். சேலத்தில் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிப் பணி விரைவு படுத்தப்படும். இக்கல்லூரியில் பல்வேறு வசதிகள் செய்து கொடுக்க இந்த வரவு—செலவுத் திட்டம் வகை செய்கிறது. மூன்று மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளையும் நாம் தொடங்கி வைப்போம்.

75. இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் உள்ள வசதி களை மேம்படுத்த, ரூ. 80.00 கோடி திட்டச் செலவிலான பெருந் திட்டம் ஒன்று ஜப்பானிய உதவியைப் பெறக் காத்துள் ளது. இத்திட்டம் தற்போது மத்திய அரசிடம் முடிவு எடுக்கப் படாமல் இருந்து வருகிறது. இத்திட்டத்திற்கான ஜப்பானிய உதவியைப் (OECF) பெற்றுத் தருமாறு மத்திய அரசை நாம் கேட்டுக்கொள்ளவிருக்கின்றோம்.

## குடிநீர் வழங்கல்

76. 1—4—1991 ஆம் நாள் அன்றுள்ளபடி, 2,483 கிராம குடியிருப்புகளில், முற்றிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லை என்று, அண்மையில் நடத்தப்பட்ட விரிவான ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியது. இந்த 2,483 குடியிருப்புகள்



அனைத்திற்கும், மொத்தம் ரூ. 13.36 கோடி செலவில் குடிநீர் வழங்கப்பட்டு விட்டது என்பதை அறிவதில் பேரவை உறுப்பினர் கள் பெருமகிழ்ச்சி அடைவார்கள். (மேஜையைத் தட்டும் ஒலி). 1—4—1990 ஆம் நாள் அன்றுள்ளபடி, 1,956 ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளில் குடிநீர் வழங்கு ஆதாரம் ஒன்று கூட இல்லை. இவற்றில் 1,418 குடியிருப்புகளுக்கு, 1—4—1991 ஆம் நாள் அன்றுள்ளபடி குடிநீர் வழங்கப்படாமல் இருந்தது. இக்குடியிருப்புகள் அனைத்திற்கும், இவ்வாண்டில் குடிநீர் ஆதாரம் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

77. கோடைக் காலத்தில் குடிநீர் இல்லாத குடியிருப்புகளில் குடிநீர் கிடைக்கச் செய்வது, கிராமக் குடிநீர் வழங்கல் திட்டத் தின் அடுத்த நடவடிக்கையாகும். இத்தகைய 9,000 குடியிருப்பு களுக்குத் தங்கு தடையின்றிக் குடிநீர் வழங்கும் வகையில், மொத்தம் ரூ. 474 கோடி செலவில் (மேசையைத் தட்டும் ஒலி). புதிய விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளோம். இத்திட்டத்திற்காக உலக வங்கியிடம் நிதியுதவி கோரியுள்ளோம். சேலம், தென்னார்க்காடு, தருமபுரி, திருவண்ணாமலை—சம்புவ ராயர் ஆகிய மாவட்டங்களில், கிராமக் குடிநீர் வழங்கும் பெரும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும், உலக வங்கி ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின்கீழ்க் கிடைக்கின்ற நிதி உதவியைப் பயன்படுத்திக் கொள்வோம். மொத்தம் ரூ. 47.68 கோடி செலவிலான இத்துணைத் திட்டத்தினால், இந்த 4 மாவட்டங்களிலும் கிராமக் குடிநீர் வழங்குவது தெளிவாகச் சீரடைய இயலும்.

78. நகர்ப்பகுதிகளில், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற் கும் நாங்கள் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளோம். மொத்தம் 99 நகராட்சிகளில், 95 நகராட்சிகளில் அடிப்படை குடிநீர் வழங்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 4 நகராட்சிகளில், அதாவது சீர்காழி, பொன்மலை, குளச்சல், பத்மநாபபுரம் ஆகிய நகராட்சிகளில் பணிகள் நடந்தேறி வரு கின்றன. 7 நகரியங்களில், 5 நகரியங்களில் அடிப்படைக் குடிநீர் வழங்கல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. கத்திவாக்கமும், மாதவரமும் சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். மொத்தம் ரூபாய் 4.97 கோடி மதிப் பீட்டுச் செலவில், 5 நகராட்சிகளுக்கான குடிநீர் வழங்கல் மேம் பாட்டுத் திட்டங்கள் நடப்பாண்டில் முடிக்கப்படும். மொத்தம் ரூபாய் 104 கோடி மதிப்பீட்டுச் செலவில், 20 நகராட்சிகளுக் கான மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன. வரும் ஆண்டுக்குள் இப்பணி விரைவுபடுத்தப்பட்டு முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

79. மொத்தம் 366 நகர்ப்பகுதி பேரூராட்சிகள் உள்ளன. இவ்வாண்டு இறுதிக்குள் 260 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கல் திட்டம் நிறைவேற்றிவைக்கப்படும். வரும் ஆண்டில் 61 நகர்ப் பகுதி பேரூராட்சிகளில் இப்பணி விரைவுபடுத்தப்படும். மொத்தம் 266 கிராமப் பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில், 86 கிராமப் பேரூராட்சிகளில், இவ்வாண்டு இறுதிக்குள் இத்திட்டம் விரிவு படுத்தப்படும். வரும் ஆண்டில், 72 கிராமப் பேரூராட்சிகளில் இப்பணி விரைவுபடுத்தப்படும்.

80. காங்கேயம், முத்தூர் மற்றும் 6 கிராமப் பேரூராட்சிகள், தாராபுரம் நகராட்சி, 83 வழியோர கிராம ஊராட்சிகள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்கக்கூடிய ரூபாய் 20 கோடி செலவி லான (மேசையைத் தட்டும் ஒலி) புதிய திட்டம் ஒன்றையும், மேற்கொள்ள இருக்கின்றோம். தருமபுரி மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க ரூபாய் 250 கோடி செலவி லான ஒகேனக்கல் குடிநீர் வழங்குத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) குறித்த விரிவான ஆய்வையும் மேற்கொள்ள இருக்கிறோம்.

81. குடிநீர் வழங்கு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உலக வங்கி, இந்திய ஈட்டுறுதிக் கழகம், வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளிலிருந்து, நாம் நிதியுதவி பெறுகிறோம். நிதியுதவி கடன் வடிவில் பெறப்படு கிறது. இந்தக் கடன் தவணைகளை உள்ளாட்சி மன்றங்கள் அரசுக்குத் திருப்பிச் செலுத்துகிறதோ, இல்லையோ அரசு கடனைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டிய நிலையிலுள்ளபடி யால், அதனையொட்டிக் கடனைத் தீர்க்கும் பிரச்சினை கடுமை யானதாகத் தற்போது எழுந்துள்ளது. இந்தக் கடன் பிரச்சினையை உடனடியாகச் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக் கப்படாவிட்டால், இந்தக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு நிதி அளிப்பது என்பது நின்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி விடும். உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து அரசுக்கு வரவேண்டிய மொத்தக் கடன் தொகை ரூபாய் 60 கோடியைத் தாண்டியுள்ளது.

82. கீழ்க்கண்ட முறையில் இச்சூழ்நிலையை ஒருவாறு சரி செய்ய நாங்கள் முடிவு செய்துள்ளோம். உண்மையிலேயே நிதி இடர்பாடு உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு, கணிசமான அள விற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அவர்களிடமிருந்து வர வேண்டிய கடன் நிலுவைகளையும், வட்டி நிலுவைகளையும் வசூலிக்கும் கால அளவு, தக்கவகையில் மாற்றி அமைக்கப்படும். அதே நேரத்தில், நீர்க் கட்டணங்கள் திட்டமிட்ட முறையில் சீரமைக்கப்படும். ஆயிரம் லிட்டருக்கு ரூபாய் 2 என்ற விதத்தில், குடிநீர் வழங்கு கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும். தொழிற் சாலைகளுக்கு நீர் வழங்குக் கட்டணங்கள் இந்த விதத்தைவிட இரண்டு மடங்காகவும், வணிகப் பயன்களுக்கான நீர் வழங்குக் கட்டணங்கள் மூன்று மடங்காகவும் இருக்கும். நீர் வழங்கு



ஏற்பாட்டினைப் பராமரிக்கும் பணி தடைபட்டு விடாமலிருக்கும் வகையில், இந்தக் குறைந்த அளவு கட்டண விதங்கள் பின்பற்றப் படும்.

83. கிருஷ்ணா நதி நீரைச் சென்னை மாநகருக்குக் கொண்டு வரும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி (மேசையைத் தட்டும் ஒலி) அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவர். ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள், அதாவது 1995, ஜூன் திங்களுக்குள் கிருஷ்ணா நதி நீரைச் சென்னை மாநகருக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயித்திருப்பதை இரு முதலமைச்சர் களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மொத்த நிதியொதுக்கம், ரூபாய் 75 கோடியில் ஆந்திரப் பிரதேசத்தில் செய்ய வேண்டிய பணிகளுக்காக நம்முடைய பங்கு ரூபாய் 50 கோடியும், தமிழ் நாட்டிற்குள் மேற்கொள்ள வேண்டிய கால்வாய்ப் பணிகளுக்கான ரூபாய் 25 கோடியும் அடங்கும். சென்னை மாநகரின் எல்லைப் பகுதிகளுக்கு நீர் கொண்டுவரும் திட்டம் மட்டுமின்றி, கூடுதல் நீரை மாநகருக்குள்ளும் அதனைச் சுற்றிலுமுள்ள பகுதிகளுக்கும் வழங்குதல், கழிவு நீரகற்றுதல் குறித்த பெரிய திட்டமொன்றை நிறைவேற்ற, நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்திற் காகத் தற்போதுள்ள குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்றுத் திட்டங் களை முழுமையாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. கிட்டத் தட்ட ரூபாய் 1,100 கோடி மொத்தச் செலவில் (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகர குடிநீர் அனுப்புகை விநியோக ஏற்பாட்டுத் திட்டத்தை நாங்கள் வகுத்துள்ளோம். உலக வங்கி யிடம் இத்திட்டத்திற்காக நிதியுதவி கோரியுள்ளோம். கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை முடிக்கும் கால இலக்கு குறித்து ஒரு முடிவு எடுப்பதற்காக, இத்திட்டத்தில் மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இரு முதலமைச்சர் களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் மனநிறை வளிக்கக் கூடிய முடிவு ஏற்பட்டதையடுத்தும், கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை முடிப்பதற்கான நாள் தற்போது உறுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதன்பேரிலும், சென்னை மாநகரக் குடிநீர் அனுப்புகை, விநியோக ஏற்பாட்டுத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி அளிக்குமாறு கேட்டு நாங்கள் உலக வங்கியை அணுகி யுள்ளோம்.

## சுற்றுச் சூழல்.

84. நம்முடைய சுற்றுச் சூழல் குறித்து உலகளாவிய நிலை யில், பெரும் அளவிற்குப் புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்குகந்ததாக இருக்கக் கூடிய வளர்ச்சிப் பணிச் செயல்முறைகளை, நாம் தொகுக்க வேண்டியுள்ளது. நிலையான வளர்ச்சியே நம்முடைய நோக்கமாக இருக்கும்.

85. வாணியம்பாடியில் தொழிற்சாலைகளின் கழிவுநீர்ச் சுத்திகரிப்புப் பொது நிலையம் ஏற்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது. ஆம்பூர், இராணிப்பேட்டை, பேரணாம்பட்டு, திண்டுக்கல், திருச்சி ஆகிய இடங்களில் தொழிற்சாலைகளின் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவை தவிர, பம்மல், பல்லாவரம், ஈரோடு, அய்யம்பேட்டை, முத்தியால்பேட்டை, திருப்பூர், பிபி அக்கிரஹாரம், பெரியசேமூர், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி, காசிப்பாளையம், பவானி, கரூர் ஆகிய இடங்களிலும் கழிவுநீர்ச்சுத்திகரிப்புப் பொதுநிலையம் அமைக்கப்படும். அனைத்து நிலையங்களுக்குமான மொத்தச் செலவு ரூபாய் 50.50 கோடியாக இருக்கும்.

86. என்னுடைய முந்தைய ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் சென்னை மாநகரில் பெரிய நீர்வழிகளில், அதாவது அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றிலும், பெரிய வடிகால் கால்வாய்களிலும் உள்ள தூய்மைக்கேடு குறித்து நான் குறிப்பிட்டிருந்தேன். சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், ரூபாய் 6.5 கோடி செலவில் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டத்தை, இப்போது நிறைவேற்றி முடித்துள்ளது. இதன் மூலம் தூய்மைக்கேடு ஏற்படுத்தும் பெரும் வாயில் ஒன்று அகற்றப்பட்டுள்ளது. தூர்வாரும் பணிகளைத் தொடங்க ஆதரவு நல்குமாறு இங்கிலாந்து நாட்டின் வெளிநாட்டு மேம்பாட்டு நிருவாகத்தை அணுகியுள்ளோம்.

87. காவிரி ஆற்றில் தூய்மைக்கேட்டைத் தடுக்க, விரிவான திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இத்திட்டத்திற்கு ரூ. 332.00 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு நிதியுதவி அளிக்குமாறு ஜப்பான் நாட்டு, வெளிநாட்டுப் பொருளாதாரக் கூட்டுறவு நிதியத்திடம் கோரியுள்ளோம். இதற்கிடையில், இத்திட்டத்திற்கு, மத்திய அரசும் உதவி நல்கலாம். காவிரி ஆற்றின் செயல் திட்டத்திற்கு விரைவில் நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

88. உலக வங்கி ஆதரவுடன் கூடிய புதிய தொழிற்சாலை தூய்மைக்கேடு கட்டுப்பாட்டு திட்டத்தில், தமிழ்நாடு சேர்க்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்க் கிடைக்கக்கூடிய நிதியுதவியின் பெரும்பகுதி, தொழிற்சாலைகள் தூய்மைக்கேடு கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை அமைக்க, அல்லது, நிலையுயர்த்த, அவற்றிற்கு நிதியுதவி நிறுவனங்கள் மூலமாக வழங்கப்படும். இந்த நிதியுதவி, குளோரோப்ளோரோ கார்பன்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருள்களைப் படிப்படியாக ஒழிக்க உதவவேண்டும் என்ற கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன்.





89. இத்திட்டத்தின்கீழ்த் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வலுப்படுத்தப்படும். மணலி பகுதி, இசராயனத் தொழிற்சாலைகளைக் கொண்ட பகுதியாக மாறி வருகிறது. மணலியில் அவசரகால இடர் உதவி நிலையத்தைத் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஏற்படுத்தும்.

## தொழில்கள்.

90. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டின் விரைந்த தொழில் வளர்ச்சிக்கான இந்த விரிவான திட்டத்தை அனைவரும் வரவேற்றுள்ளனர்.

91. 1969 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மத்திய முதலீடு 10 சதவீதமாக இருந்தது. அது, 1989 ஆம் ஆண்டில் 5.21 சதவீதமாகப் பெரிதும் குறைந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்வதில் ஏற்பட்டுள்ள காலத்தாழ்வு, எதிர்கால வாய்ப்புவளம் குறித்த நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது. பெருந்திட்டங்கள் பலவற்றிற்கு அனுமதி அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசை அணுகியுள்ளோம். ''பாம்பே ஹை'' பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டுவரத் தென் மாநிலங்களுக்கான எரிவாயு இணைப்பு அமைக்கும் திட்டத்திற்கு, உடனடியாக அனுமதியளிக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். ''தேசிய வேதிம நறும் பொருள் திட்டத்திற்கு'' ( NAPCO ) அனுமதியளிப்பது காலந்தாழ்த்தப்பட்டுவருகிறது. பெருமளவில் துணைத் தொழில் பிரிவுகளை உருவாக்கும் வளவாய்ப்புடைய இந்தப் பெருந்திட்டத்திற்கு, உடனடியாக மத்திய அரசு அனுமதியளிப்பது அவசியமாகிறது.

92. புதிதாக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகம் ( TACID ), நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான், பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, தருமபுரி மாவட்டத்திலுள்ள பர்கூர் ஆகிய இடங்களில் நான்கு பெரிய தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவும். இத்திட்டங்களைச் செயல்படுத்த நிதியுதவி அளிக்குமாறு, ஆசிய வளர்ச்சி வங்கியை நாங்கள் அணுகியுள்ளோம். இந்த வளர்ச்சி மையங்களின் பணியைத் தொடங்க, தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 5 கோடி ஒதுக்கியுள்ளோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 6

93. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 2,800 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில், மொத்தம் ரூ. 755 கோடி முதலீட்டுடன், 9 புதிய திட்டங்கள் குறித்த பணியைத் தொடங்கியுள்ளது. இத்திட்டங்கள் விரைவுபடுத்தப்படும்.

94. தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம், 1991—92 ஆம் ஆண்டில், ரூபாய் 42 கோடி கடனாக வழங்கும். 1991—92 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கடன் வழங்கு அளவு, ரூ. 145 கோடியை எட்டும். இவை, முன் எப்போதும் அடைந்திராத மிக உயர்ந்த நிலைகளாகும். 1992-93இல், இவ்வாறு கடனாக வழங்கப்படும் தொகைகள் மேலும் உயர்த்தப்பட்டு, முறையே தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம், ரூபாய் 50 கோடியும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், ரூபாய் 180 கோடியும் என்கிற இலக்கினை எய்தும்.

95. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறுதொழில் அதிபர்களுடன் 4—3—1992 ஆம் நாளில் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். ஜப்பானைச் சேர்ந்த அயல்நாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் ( OECF ) உதவியுடன், மொத்தம் ரூபாய் 70 கோடி முதலீட்டில், குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைகளை அமைக்கும் திட்டத்தைச் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் செயல்படுத்தும். இத்திட்டத்தின்கீழ் பின்வரும் முக்கியத் துறைகளில் குறிப்பிட்ட தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் நிறுவப்படும்:—

* தொழில் மின்னணுவியல்
* தோல்பொருட்கள்
* உள்ளாடைகள் துணி தயாரிப்பு
* பொறியியல் பொருட்கள்
* மோட்டார் வண்டி துணைப் பாகங்கள்
* பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள்
* உணவுப் பொருட்கள் பதப்படுத்தல்

96. நாங்கள் அளிப்பதாக உறுதியளித்த உதவித்தொகைகளும், ஊக்க உதவிகளும், உரிய நேரத்தில் உறுதியாகக் கிடைக்க உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அவற்றை உடனுக்குடன் வழங்கும் வகையில் வரவு—செலவுத் திட்டத்தில், போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நலன்.

97. நமது நாட்டின் இடர்ப்பாடான பொருளாதார நிலைமை உற்பத்தித் தொழில் பிரிவுகளைத் திருத்தியமைப்பது பற்றிக் கடுமையான விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. இப்போது



1992 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நிலவும் தொழில் நுட்பவியல் முன்னேற்றமும், பொருளாதாரக் கட்டாயங்களும் உற்பத்தித் தொழில் பிரிவுகளைச் சீரமைப்பது குறித்தும், தொழிலாளர்களுக்கு அதன் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தும் நன்றாகச் சீர் தூக்கி ஆய்ந்து முடிவு செய்ய வேண்டிய அவசியத்தை நமக்கு ஏற்படுத்தியுள்ளன, வெளியேற்றக் கொள்கை (exit policy) குறித்து தேசிய அளவில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன; இப்பொருள் குறித்து நடைமுறை சாத்தியமான கருத்தை நாம் மேற்கொள்ள வேண்டிவரும் என்று நம்புகிறோம், எவ்வாறு இருந்தாலும். சிறிதளவு ஆட்குறைப்பு செய்வது தவிர்க்க முடியாததாக இருக்கும் எனில், அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை நாம் காணவேண்டியிருக்கும். மாநிலத் தொழிலாளர் மறுவாழ்வு நிதிக்காக. ரூ. 50.00 கோடி தொகுப்பு நிதி அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு மத்திய அரசை அணுகியுள்ளோம், இந்த நிதி. பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களைத் திருத்தி அமைப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளப்படும், எந்தச் சூழ்நிலையிலும் தொழிலாளர்கள் நலம் புறக்கணிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்,

98. நலிந்த தொழிற் பிரிவுகளை மீண்டும் தொடங்குவதில் இடையூறுகள் இருந்த போதிலும் மாநிலத்தில் உள்ள பல்வேறு தொழில் பிரிவுகளை எதிர் நோக்கியுள்ள இடையூறுகளைத் தீர்ப்பதற்காக. தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு நாங்கள் சிறப்பு முயற்சிகளை எடுத்துள்ளோம், கடந்த மூன்று ஆண்டுகளாக மூடிக் கிடந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடைய பெரு முயற்சிகளின் காரணமாகத் தற்போது மீண்டும் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி), தொழிலாளர் நலனைக் காக்கின்ற வகையில் இப்பணி அரசினுடைய குறிப்பிடத்தக்க சாதனையாகும், இந்தத் தொழிற்சாலையில் வேலையிழந்த தொழிலாளர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்காகவும் தொழிற்சாலையைத் திறக்கவும் அரசு ரூ, 3 கோடி அளவுக்கு நிதி வசதி செய்து தந்துள்ளது. ஏறத்தாழ ஓராண்டுக் காலமாகக் கதவடைப்பு செய்யப்பட்டிருந்த கே.சி.பி. லிமிடெட் நிறுவனம். தற்போது மீண்டும் திறக்கப்பட்டு' அக்டோபர் 1991-லிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி), பின்னி ஆலை தொழில் தகராறை நேரிய வழியில் தீர்த்து வைக்க அரசு தக்க முயற்சி எடுத்து வருகிறது, நிருவாகமும். தொழிலாளர் தரப்பும் அரசிடம் மறு ஆய்வு மனு கொடுத்துள்ளன, இந்தத் தகராறினை விரைந்து தீர்த்து வைத்துத் தொழிற்சாலையைத் திறக்க அரசு [illegible] நடவடிக்கைகள் அனைத்தையும் முறையாக [illegible] வருகின்றது.

99, துணி ஆலைகளில் ஊதியக் கொடை குறித்த தகராற்றில் ஏறத்தாழ 45,000 தொழிலாளர்கள் நலன் சம்பந்தப்பட்டிருந் தது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டுப் பயனுள்ள முறையில் இதனைத் தீர்த்து வைத்தார். மூடிக் கிடக்கும் 6 தொழில் நிறுவனங்களையும், 9 துணி ஆலைகளையும் சேர்ந்த 21,137 தொழிலாளர்களுக்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ, 400 என்னும் வீதத்தில் நடப்பு ஆண்டில் ரொக்க உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி).

100, தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கான நல நிதியில் 54,924 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இந்நிதிக்குத் தற்போது அரசு ஆண்டு ஒன்றுக்கு ஒரு தொழிலாளருக்கு ரூ; 2 வீதம் தொகை அளிக்கிறது, தொழிலதிபர்கள் ஒரு தொழிலாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ,2 வீதம் தமது பங்குத் தொகையை இந்நிதிக்குச் செலுத்துகிறார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கல்வி, மனமகிழ் வசதி, மருத்துவ உதவி மற்றும் பிற வசதிகளை அளிக்க இந்நிதி பயன் படுத்தப்படுகிறது. இந்நிதிக்கு அரசின் பங்கும், தொழிலதிபர் பங்கும் இனி ஆண்டு ஒன்றுக்கு தொழிலாளர் ஒருவருக்கு ரூ. 10 ஆக உயர்த்தப்படும், மேலும், பட்டாசுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 18,558 தொழிலாளர்களையும் சேர்க்கும் வகையில் இந்நிதி விரிவுபடுத்தப்படும்.

101. புதிய பொருளாதாரச் சூழ்நிலையில். தொழிலாளர் களுக்குப் பயிற்சியும், மறு பயிற்சியும் அளிப்பதற்கு மிக உயர்ந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். மாறி வரும் தொழில் நுட்பவியலையொட்டித் தொழில் நுட்ப உத்திகளில் மாறுதல்களைக் கையாளுகின்ற திறன் மிகவும் அவசியம். தொழிலாளர்களுக்குப் பயிற்சியும், மறு பயிற்சியும் அளிக்கின்ற தக்க பயிற்சி வசதிகளைத் தொழில் துறைக்கு அளித்து வரும் கொள்கையை நாம் தொடர்ந்து பின்பற்றுவோம். நம்முடைய தொழிற் பயிற்சி நிறுவனங்களைத் தரம் உயர்த்தும் பொருட்டு தொழில் நுட்பப் பயிற்சித் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவோம்.

## மின்சக்தி,

102. நீர்த்தேக்கங்களில் போதிய அளவு நீர் இருந்ததாலும் தேவையான அளவுக்கு நிலக்கரியைப் பெறுவதில் உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும். தமிழ்நாட்டில் மின்வெட்டு இல்லாமல் பார்த்துக் கொண்டோம், நடப்பாண்டில், மின் உற்பத்தியைக் கூடுதலாக 220 மெகா வாட் திறன் அளவிற்கு அதிகரிப்போம்,



103, வட சென்னையில், மொத்தம் 630 மெகாவாட் திறன் கொண்ட மூன்று 210 மெகாவாட் மின் உற்பத்தி பிரிவுகள் அமைக்கும் பணியின் முன்னேற்றத்தை, நமது நிதி இடர்ப்பாடு பாதிக்காதவாறு பார்த்துக் கொண்டோம். மொத்தம் ரூ, 845 கோடி ஒதுக்கீட்டிலான இப்பெருந்திட்டம். ஆசிய வளர்ச்சி வங்கியின் ( ADB ) நிதியுதவியுடன், செயல்படுத்தப்பட்டு வரு கிறது. மேற்கொண்டும் ரூ. 944 கோடி செலவில் 500 மெ. வாட் திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்திப் பிரிவு ஒன்றை வடசென்னையில் ஏற்படுத்துவதற்காகவும். ஆசிய வளர்ச்சி வங்கியை அணுக உள்ளோம்.

104. ஜெயங்கொண்டசோழபுரத்தில். பழுப்பு நிலக்கரி சுரங்கம் வெட்டுதல், மின் உற்பத்தி செய்தல் ஆகிய ஒருங் இணைந்த பெரும் திட்டம் ஒன்றை, கூட்டுத் துறையில் ஏற் படுத்த அரசு மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகளைப் பேரவை உறுப்பினர்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). மொத்தம் ரூ, 7,000 கோடி செலவில், 1,500 மெ,வா, மின் உற்பத்தி செய்யும் இப்பெருந் திட்டம், படிப்படியாகச் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இத் திட்டத்தை மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச் சிக் கழகத்திற்குத் (டிட்கோ) தொடக்கத்தில், பங்கு மூலதன வகையில், தொகை அளிக்க, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ, 2.5 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது,

105· தமிழ்நாட்டில் மத்திய அரசின் பல்வேறு மின் உற்பத்தித் திட்டப் பணிகள் மெத்தனமாக நடந்து வருவது குறித்து, நாம் பெரிதும் கவலை கொண்டுள்ளோம். முதல் சுரங்க விரி வாக்கப் பணியும். நெய்வேலியில் 420 மெ.வா. திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்திப் பிரிவு ஏற்படுத்தும் பணியும் விரைவு படுத்தப்பட வேண்டும். மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணி யும், அதையிணைந்த மின் உற்பத்தித் திட்டமும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். கூடங்குளம் அணுமின் திட்டம் தொடர்பான ஐயப்பாடான நிலையைப் போக்கி, மத்திய அரசு அதனை தெளிவுபடுத்த வேண்டும். உள் நாட்டுத் தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தி அல்லது ஏனைய வெளிநாட்டு உதவியைப் பெற்று, இந்த மின் திட்டத்தை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம். திட்டப்பகுதியில் ஆயத்தப் பணிகளும் ஏற்கெனவே நிறைவு பெற்றுவிட்டதால், இப்பெருந்திட்டம் குறித்து, விரைவாகத் தக்க முடிவு எடுப்பது அவசியமாகும்.

106. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், வரும் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தி மேம்பாட்டு திட்டத்தை 2 புதிய வட்டாரங்களில் செயல்படுத்தும். [illegible] இயங்கும் 100 மெ.வா. மின் சக்தித் [illegible] சக்தி மூலம்

கொண்ட பிரிவு ஒன்று அமைக்கும் திட்டம் ஒன்றை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். காற்றுச் சக்தி நம் மின் மைய இணைப்பு ஏற்பாட்டில் நிலையான சக்தி ஆதாரமாக விளங்கும் வகையில், இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பது குறித்த புதிய வழிகள் பற்றிப் பரிசீலித்து வருகிறோம்.

107. வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்க, நிறுவன நிதியைப் பெறுவதில் இடர்ப்பாடு இருந்து வந்துள்ளது. எனவே, உழவர்கள் இதற்கான செலவுத்தொகையைச் செலுத்துவதின் பேரில், மின்னிணைப்பு பெறுவதற்கான புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளோம். வரும் ஆண்டில், காத்திருப்போர் பட்டியல்படி, 20,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படும். புதிய திட்டத்தின் கீழ், மேலும் 20,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படும். வரும் ஆண்டில், 40,000 குடிசைகளுக்கு இலவச மின்னிணைப்பு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

108. தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி இடர்ப்பாடு குறித்த பிரச்சினையும் நம்முன் உள்ளது. தமிழ்நாடு மின் வாரியம் திறமையாகச் செயல்பட்டபோதிலும், இரண்டு காரணங்களால் அதன் நிதிநிலை மிகவும் பாதிக்கப்படுகிறது. முதலாவதாக நமது மாநிலம், நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து மிகுந்த தொலைவில் இருப்பதால், பிற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாட்டில் நிலக்கரியின் விலை மிக அதிகமாக ஆகிறது. இரண்டாவதாக, உழவர்கள் அனைவர்க்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுவதாலும் பிற சலுகைகள் வழங்குவதாலும் ஓராண்டுக்கு உண்மையில் ரூ. 560 கோடி இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பின் ஒரு பகுதியை அரசு ஈடு செய்கிறது. வரவு—செலவுத் திட்டத்தில், இழப்பீட்டுக்கு ரூ. 350 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து வரவேண்டிய ரூ. 100 கோடி வட்டித் தொகையையும் அரசு தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்திற்கு இத்தொகையை அளிப்பதில் அரசுக்கு மிகுந்த இடர்ப்பாடு உள்ளது. இச்சூழ்நிலையில் மேற்கொண்டும் அதிகரித்துள்ள செலவுகளையும் நிலக்கரியின் விலை அண்மையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதையும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. மின்சக்தி ஒரு விலை மதிப்புள்ள இடுபொருள் என்னும் வகையில், அதற்கு முறைப்படி மின் கட்டணம் விதிப்பதன் அவசியம் பற்றி, அனைத்து நிதி நிறுவனங்களும் வலியுறுத்தி வந்துள்ளன. இந்நிலைமைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றிப் பொதுக்கருத்து ஒன்றினை உருவாக்க வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டிருக்கிறது.





## கைத்தறி

109. என்னுடைய கடந்த ஆண்டு வரவு—செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளபடி, நாங்கள் இரண்டு புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். கட்டுப்படியாகாத கைத்தறிகள் அனைத்தையும் நீக்கிவிட்டு, படிப்படியாக அவற்றை விசைத்தறிகளாக மாற்றும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடரப்படும். வரும் ஆண்டில், நாங்கள் 5,000 விசைத்தறிகளை நிறுவ இருக்கிறோம்.

110. கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டமொன்றும் செயல்படுத்தப்படுகிறது. வருமாண்டில் 5,000 கைத்தறிகள் நவீனப்படுத்தப்படும்.

111. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன், ரூபாய் 22 கோடி செலவில், பர்கூரில் புதிய கூட்டுறவு நூற்பாலை ஒன்று (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்படுத்தப்படும். இத்திட்டத்திற்குத் தேவையான சமவீதப் பங்குவகையிலான மூலதன உதவியளிக்கும் பொருட்டு, வரவு—செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

112. பட்டுத் துணி விற்பனைக்காக காஞ்சிபுரத்தில் விற்பனை வளாகம் ஒன்று ஏற்படுத்தப்படும். பருத்தித் துணி விற்பனைக்காக, அதேபோன்று வளாகம் ஒன்று ஈரோட்டில் நிறுவப்படும். கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடித் தொகை வழங்க, வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

113. நெசவாளர்களின் நலனுக்காக இவ்வரசு எப்போதும் பாடுபட்டு வந்துள்ளது. நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஈட்டுறுதித் தொகை ரூபாய் 10,000லிருந்து ரூபாய் 15,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இறந்துபோகும் நெசவாளரின் குடும்பத்திற்கு மாதமொன்றுக்கு ரூபாய் 250 வழங்கும் ஓய்வூதியத் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் நெசவாளர்களுக்காகத் தறிக்கூடங்கள் இணைந்த வீடுகள் 2,000 கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## ஊரக வளர்ச்சி

114. நடப்பாண்டில், சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், மேற்கொள்ள விரும்பும் பல்வேறு பணிகளுக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 1 கோடி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 386 கோடியாகும். முதல் நிலையில், நடப்பாண்டில் நாம் ரூ. 193 கோடி வழங்கியுள்ளோம். எஞ்சிய ரூ. 193 கோடி 1992—93 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| திட்டத்தின் பெயர். | பணிகளின் எண்ணிக்கை. | செலவு |
|---|---|---|
| | | (ரூ. கோடியில்) |
| *குடிநீர் வழங்கல் | 5,999 | 53.36 |
| *சாலைகள் மேம்பாடு | 3,874 கி.மீ. | 83.34 |
| *தெருவிளக்குகள் | 69,781 | 19.88 |
| *தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் | 1,068 | 14.79 |
| *சத்துணவு மையங்கள் அமைத்தல் | 1,409 | 9.98 |
| *சிறுபாசன ஏற்பாடுகளைப் புதுப்பித்தல் | 2,677 | 11.82 |
| *தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கல் | 978 | 1.45 |

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பது நம்முடைய நோக்கமாகும், இந்தப் பெருந்திட்டத்தில், மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும், அப்பணிகளின் தரத்தினை உறுதி செய்யும் நோக்குடன். 1993 மார்ச்சுக்குள் திட்டப்பணிகளை முடிக்க வேண்டுமென நாம் முடிவு செய்துள்ளோம்.

115. உள்ளாட்சி மன்றங்களுக்குப் போதிய நிதி வசதியினை அளிக்க நாம் தனி நடவடிக்கைகள் எடுத்துள்ளோம், உள்ளூர் சாலைக்குரிய பராமரிப்பு மானியம் ரூ. 9 கோடியிலிருந்து ரூ. 12 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கைப்பம்புகள், விசைப் பம்புகள் ஆகியவற்றின் பராமரிப்புக்காக கூடுதலாக ரூ, 5,65 கோடி தொகை ஒதுக்க இந்த வரவு-செலவு திட்டம் வகைசெய்கிறது, நிதிவகையில் நலிவுற்ற ஊராட்சிகளில் பழைய தெருவிளக்குகளுக்குப் பதிலாகப் புதியனவற்றை அமைக்க வரும் ஆண்டில் ரூ. 3 கோடிக்குச் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது,





அடிப்படை ஊரகப் பணி வசதிகளை வழங்கவும், பராமரிக்கவும் அரசு எடுத்த தனி நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் போற்றுவார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி,)

## நகர்ப்பகுதி மேம்பாடு,

116, நகர்ப்பகுதிகள் மிக விரைவாக வளர்ந்து வருகிற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நகர் பகுதிகளில் 34 சதவீதம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இம் மாநிலத்தில் நகர்ப்பகுதி மேம்பாட்டிற்காக விரிவான திட்ட அணுகுமுறை ஒன்றை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது,

117. நகர்ப்பகுதி மேம்பாட்டிற்காகப் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பல பணிகளுக்காக நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது, நிதி ஆதாரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய, நிதியுதவி ஏற்பாடுகள் குறித்தும் நாம் முனைப்பாகக் கவனம் செலுத்தி வருகிறோம்.

118. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் உலக வங்கி ஆதரவு பெற்ற நகராட்சி நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி, இம்மாநிலத்தில், நகர்ப்பகுதி மேம்பாட்டிற்கு உதவும் மூதன்மையான நிதியுதவியமைப்பாகவுள்ளது. இந்நிதியின் கீழ் நகராட்சிகளின் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பாண்டில், மொத்தம் ரூ. 36.90 கோடி செலவில், 34 திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில், மொத்தம் ரூ. 50 கோடி செலவில் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க இந்நிதியமைப்பு ஒப்புதலளிக்கும். நகராட்சிகள், தங்களுடைய திட்டங்களுக்குத் தேவைப்படுகிற நிதியின் பொருட்டு, இந்த நிதியமைப்பை அணுகலாம், அதே நேரத்தில், நகராட்சிகள் தாங்கள் பெற்ற கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த ஏதுவாகத் தங்களுடைய நிதி ஆதாரங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் பொறுப்பேற்க வேண்டும்.

119. மாநில நகர ஊரமைப்புத் திட்ட நிதி ரூ. 33 கோடி அளவுக்கான நிதி வசதியைக் கொண்டு, தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது. இந்நிதி பேரூராட்சிகள், மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் நலிவுற்ற நகராட்சிகளின் திட்டப் பணிகளுக்குப் பெரிதும் உதவிபுரிவதாக இருக்கும். ரூ. 2.70 கோடி மதிப்புடைய 16 திட்டப் பணிகளுக்கு, நடப்பாண்டில், இந்நிதியிலிருந்து அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், ரூ. 5.00 கோடி மதிப்புடைய திட்டப் பணிகளுக்கு ஒப்புதலளிக்கப்படும்.

120. உலக வங்கி நிதியுதவி பெற்று நடைபெறுகின்ற பெரிய திட்டப் பணிகளில் ஒன்றாக விளங்கும் தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விளைந்த பயன், கடந்த

காலத்தில், மனநிறைவளிப்பதாக இல்லை. பெரிய திட்டப்பணிகளின் இந்நிலைமை முழுவதையும் நாம் மறுமதிப்பீடு செய்துள்ளோம். தற்போது, அவற்றின் பயன்பாடு, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 65 கோடி மட்டுமே ஆகும். வரும் ஆண்டில் அவற்றின் பயன்பாட்டினை ரூ. 127 கோடியாக உயர்த்த நாம் முடிவு செய்துள்ளோம். பல்வேறு புதிய சாலை மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

121. நடுத்தர, சிறிய நகரங்களின் ஒருங்கிணைந்த, வளர்ச்சிக்காக மத்திய அரசும் ஆதரவளித்துள்ளது, இத்திட்டத்தின் கீழ், வரும் ஆண்டில் ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ. 1.2 கோடி செலவில், கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், விழுப்புரம், பெரம்பலூர், எடப்பாடி, திருத்தணி ஆகிய நகரங்களில் மேம்பாட்டுப் பணிகளை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

122. ஒவ்வொரு நகரத்தின் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்து திட்டமிட, நாம் நவீனத்தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டியுள்ளது. முப்பது சிறிய, நடுத்தர நகரங்களுக்கு, ரூ. 30 இலட்சம் செலவில் போக்குவரத்து சாலை வசதிகளுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. கரூர், திருவண்ணாமலை, கும்பகோணம், தேனி. அல்லி நகரம் ஆகிய நகரங்களில். பெரிய அளவிலான தரை வரைப்படங்கள், பல புகைப்படங்கள் இணைந்த பேரளவுப் படம் தயாரிக்க, விமான மூலம் புகைப்படம் எடுக்கக்கூடிய நவீன தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தப்படும்.

123. நகர்ப்பகுதியிலுள்ள ஏழை மக்களுக்கு பல்வேறு திட்டப் பணிகள் உள்ளன. இப்பணிகளைச் செம்மையாகச் செயல் படுத்துவது' அவசியமாகும், எனவே, நகராட்சிகள் ஆணையகத்தில் நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கு எனத் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் நாம் முடிவு செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி),

## சென்னை மாநகர் வளர்ச்சி.

124. என்னுடைய கடந்த வரவு—செலவுத் திட்ட உரையில் நான் அறிவித்த '' எழில்மிகு சென்னை 2000 '' திட்டம் முழு வடிவம் பெற்றுள்ளதுடன், உலகளாவிய வகையில் ஆர்வத்தை ஈர்த்துள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம், அண்மையில், '' கி.பி. 2011-ல் சென்னை '' எனும் எதிர்க்காலத் திட்டத்தை தயாரித்துள்ளது. அத்திட்டத்தினை தடைகள், வாய்ப்பு வளங்கள், அனைத்தும் கண்டறியப்பட்டுள்ளன. இந்த பின்னணியில், '' எழில்மிகு சென்னை 2000 '' செயல்பாட்டுத் திட்டமாக அமையும். முதல் கட்டத்தில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ, 1,250 கோடியாக இருக்கும்.



125. சென்னை மாநகர குடிநீர் அமைப்புகை விநியோகத் திட்டப்பணியும் சுற்றுசூழல் மேம்பாட்டுத் திட்டப் பணியும் உலக வங்கியின் இசைவு பெறப்பட்டதும் செயல்படத் தொடங்கும், இப்பணிகள் கிருஷ்ணா நீர்த்திட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

126, மின் பகிர்வு முறை மேம்பாட்டுப் பணிகள் நடந்தேறி வருகின்றன. நடப்பாண்டில் ரூ. 15 கோடி செலவிடப்பட்டுள்ளது, வரும் ஆண்டில் ஒதுக்கீடு ரூ. 53 கோடியாக இருக்கும்,

127, போக்குவரத்து ஏற்பாடுகளில் பெரிய சீரமைப்புப் பணிகள் குறித்தும் திட்டமிடப்பட்டுள்ளன. அண்ணா சாலையில் ஒரு பகுதியில் முற்றிலும் பேருந்துகளுக்கான மேல் நிலை வழித்தடத் திட்டத்திற்கு ரூ. 100 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. விரிவான திட்டம் தயாரானதும் இப்பணியை நாம் ஒப்படைக்கவுள்ளோம். பல்லவன் போக்குவரத்துக் கழகம், வரும் ஆண்டில் ரூ. 15 கோடி செலவில், பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, புதிய பேருந்துகளை வாங்கும், மற்றும் பேருந்துகளின் எண்ணிக்கையைப் பெருக்கும் திட்டத்தை மேற்கொள்ளும். வரும் ஆண்டில் சென்னை மாநகரில் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

128. வெள்ள நீர் வடிகால்கள், தெருவிளக்குகள், திடக் கழிவுப் பொருள்களைக் கையாளுதல் மற்றும் ஏனைய நகராண்மைப் பணிகளைச் சீரமைப்பதற்கான துணைத் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 20 கோடி செலவு பிடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

129. மாநகரில் நெரிசலைக் குறைக்கும் நோக்குடன், மாநகர எல்லையோர நகர் வளர்ச்சிப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. சென்னை அருகே அம்பத்தூரில் ரூ. 40 கோடி செலவில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், பெரிய அளவிலான மனைகள், பணியிடங்கள் திட்டம் ஒன்றைப் புதிதாக மேற்கொள்ளும். குடிசைமாற்றுப் பணித்திட்டங்களும் வேகமாக நடந்தேறி வருகின்றன.

## சாலைகள்.

130. சாலைகளைப் பராமரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசு, மிக உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. சாலைகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு, 1990—91ஆம் ஆண்டில், ரூ. 290.25 கோடி என்ற அளவில் இருந்தது. 1992-93ஆம் ஆண்டிற்கு அது ரூ. 314.51 கோடி என்ற அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி). வரும் ஆண்டில்,

சாலைகளுக்கான நிதி ஒதுக்கம், மோட்டார் வண்டிகள் வரியிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயை விட அதிகமாகவே இருக்கும்.

131. சாலைகளைப் பராமரிக்க, ஒன்பதாம் நிதிக்குழு வரையறுத்துள்ள நெறிமுறை அளவிற்குமேல், முதல் முறையாக, 1992-93ஆம் ஆண்டில், சாலைகளைப் பராமரிப்பதற்கு நாம் நிதி ஒதுக்கியுள்ளோம் என்பதை அறிந்து உறுப்பினர்கள் பெரு மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். சாலைகளைப் பராமரிப்பதற்கு நாம் ரூ. 125 கோடி ஒதுக்கியுள்ளோம். இது 1990-91 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூ. 65.83 கோடியுடன் ஒப்பிடும்போது, ஏறத்தாழ இருமடங்காகும் (மேசையைத் தட்டும் ஒலி).

132. ரூ. 20 கோடி செலவில் நடப்பாண்டில் தொடங்கப்பட்ட 'சிறப்பு பழுதுபார்ப்புப் பணித்திட்டம்', வரும் ஆண்டிலும் ரூ. 30 கோடி என்ற உயர் அளவு நிதி ஒதுக்கத்துடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ரூ. 5 கோடி செலவில் தொழிற்சாலைப் பகுதிகளுக்கு அருகே சாலைகளைச் சிறப்பான முறையில் பழுதுபார்ப்பதற்கான புதிய திட்டம் ஒன்று வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

133. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 800 கி.மீ. சாலைகளை மேம்படுத்துவதற்கான, ரூ. 45.28 கோடி மொத்த நிதிஒதுக்கத்துடன் செயல்படுத்தக்கூடிய ஊரக அங்காடிச் சாலைகள் துணைத்திட்டம், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். வட ஆற்காடு—அம்பேத்கார், தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ. 3.12 கோடியாக இருக்கும்.

134. நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில், சாலைகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை, மொத்தம் ரூ. 30 கோடி செலவில் மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் (மேசையைத் தட்டும் ஒலி). இத்திட்டம், பொதுத்துறை அடிப்படைவசதி மற்றும் குத்தகை நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் ( ILFS ) ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்ய மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் குறிப்பிட்ட இடங்களில் சுங்க வசூல் செய்யப்படும்.

135. சென்னை முதல் கடலூர் வரையிலான கிழக்குக் கடற்கரையோரச் சாலைப்பணி ரூ. 75 கோடி செலவில் நடைபெற்றுவருகிறது. வரும் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, நடப்பாண்டு அளவான ரூ. 8.5 கோடியிலிருந்து, ரூ. 11.9 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.





136. மொத்தம் ரூ. 328.44 கோடி செலவில் புதிய சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இத்திட்டம் 3,919 கி.மீ. சாலைகளை வலுப்படுத்தி மேம்படுத்த வகை செய்கிறது. இது இம்மாநிலத்தில், போக்குவரத்து சீராக அமைய வழி வகுக்கும். அதே சமயம், இது கிராமப்பகுதிகளில் மக்கள் அங்காடிகளுக்கு எளிதில் சென்று வரும் வசதியை மேம்படுத்தும். இத்திட்டத்திற்கு வெளி நாட்டு நிதியுதவி கிடைக்குமென நம்புகிறோம்.

137. தேசிய நெடுஞ்சாலைகளில் நான்கு வழித்தடம் அமைக்கும் பணி, மிகக்காலத்தாழ்வோடு நடைபெற்றுவருவது குறித்துக் கவலை கொண்டுள்ளோம். சென்னை முதல் மதுரை வரையிலான தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழித்தடம் அமைக்கும் பணி, பகுதி பகுதியாகத்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 374 கி.மீ. நீளத்திற்கான பணியை, உயர் முன்னுரிமை கொடுத்து மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதேபோல மொத்தம் 316 கி.மீ. நீளமுள்ள வேலூர், கிருஷ்ணகிரி வழியாகச் செல்லும் சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழித்தடம் அமைக்கும் பணி, உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தப் பெரிய தேசிய நெடுஞ்சாலை அடிபப்படை வசதித் திட்டத்தை, மேற்கொள்வதில், மத்திய அரசு தயக்கம் காட்டக்கூடாது. இதற்காக சுங்க வசூல் மேற்கொள்வது பொருத்தமானதாக இருக்குமாயின், அது குறித்தும் பரிசீலிக்கலாம். சென்னையையும் கன்னியாகுமரியையும் கடற்கரையோரச் சாலை மூலம் இணைக்கும், 737 கி. மீ. நீளத்திற்கான புதிய தேசிய நெடுஞ்சாலை மட்டும்தான் நாட்டின் கடற்கரையோர தேசிய நெடுஞ்சாலைகளில் விடுபட்டுப்போன ஒன்றாகும். இச்சாலையை அமைக்கும் பணியை விரைவில் மேற்கொள்ள வேண்டும். மத்திய சாலை நிதிக்குக் கிடைத்துள்ள உயர்த்தப்பட்ட வசூல்களை, மாநிலத்தில் சாலை மேம்பாட்டிற்கு அளித்துதவ வேண்டுமென்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருவோம்.

## வீட்டு வசதி.

138. இவ்வரசு, 'குடும்பத்திற்கு ஒரு வீடு அமையவேண்டும் என்கிற கொள்கை நோக்கத்தைக் கொண்டுள்ளது. நடப்பாண்டில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம், வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஏனைய துறைகள் போன்ற பல்வேறு அமைப்புகள் நிறுவனங்கள் ஆகியவற்றின் வாயிலாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம், வரும் ஆண்டில், மேற்சொன்ன அரசுத்துறை நிறுவனங்கள். அமைப்புகள் வாயிலாக 1,10,000 வீடுகளைக் கட்டி முடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 6

139. தனியார் துறையில் வீடுகள் கட்டுவதை ஊக்குவிக்கவும் நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம், 'வீட்டு வசதி மைய இணைப்பு வளர்ச்சி' (Grid Development) என்கிற புதிய திட்டம் ஒன்றை நாம் தொடங்கியுள்ளோம்; அதன் மூலம், தனியார் துறை வீட்டு வசதியில் விரைவான வளர்ச்சியினை மேற்கொள்வது சாத்தியமாகும். வீட்டுவசதி மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்த வீட்டு வசதி நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பது குறித்தும் நாம் முறைப்படி பரிசீலனை செய்வோம்.

140. இத்துடன். வீட்டு உரிமையாளர்கள் வீடுகளின் தரத்தினை உயர்த்தும் புதிய திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது, வரும் ஆண்டில் கிராமப் பகுதிகளில் 27,000 வீடுகள் தரமுயர்த்தப்படும். நகர்ப் பகுதிகளில் 30,000 வீடுகள் தரமுயர்த்த எடுத்துக் கொள்ளப்படும்.

## மகளிர் மேம்பாடு.

141. ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலை வாய்ப்பு அளிக்க, ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் தொடங்கியுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மாபெரும் மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள வெளிநாட்டு அமைப்புகளிடமிருந்தும், ஏனைய திட்டங்களிடமிருந்தும் ஆதரவைத் திரட்டியுள்ளோம். இத்திட்டத்தை தருமபுரி, சேலம், தென்னாற்காடு ஆகிய 3 மாவட்டங்களில் செயல் படுத்த, வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதியம் ( IFAD ) உதவி அளித்துள்ளது. நடப்பாண்டில், இத்திட்டத்தை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு நீட்டித்துள்ளோம், இந்த இரு மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல் படுத்த வேளாண்மை மேம்பாட்டிற்கான அனைத்து நாட்டு நிதியம் உதவி அளிக்குமென நம்புகிறோம்.

142. இந்தத் திட்டத்தை எஞ்சியுள்ள மாவட்டங்களிலும் மேற்கொள்ளக் கருதியுள்ளோம், என்னுடைய முந்தைய ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையிற் குறிப்பிட்டுள்ளது போல. இத்திட்டம் கவனமாக முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொண்ட பின்னர், முறையாகச் செயல் படுத்தப்படும், சுய உதவிக் குழுவினர் மூலம் நிலையான சுய வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்வதே எங்களின் நோக்கமாகும்.

143. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். சிறு குடும்பக் கோட்பாட்டை ஊக்குவிக்கவும் பெண் குழந்தைகளுக்குப் பயனளிக்கவும் புதிய திட்டம் ஒன்றை அண்மையில் அறிவித்துள்ளார்கள், (மேசையைத்



1992 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தட்டும் ஒலி) ஆண் குழந்தைகள் ஏதுமில்லாத ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் பெற்றோர் கருத்தடை செய்து கொண்டுள்ள குடும்பங்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும், அத்தகைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000 நிதி நிறுவனம் ஒன்றில் முதலீடு செய்யப்படும், அதனைக் கொண்டு தொடக்க, நடுநிலை, உயர் நிலை, மேல் நிலைக் கல்விக்கும், கல்லூரிப் படிப்புக்கும் குறித்த காலத்திற்கொருமுறை. அப்பெண் குழந்தைகளின் கல்விக்காகக் குடும்பத்திற்குத் தொகை வழங்கப்படும், அப்பெண் குழந்தைக்கு 20 வயது ஆகும்போது. தனக்கென்று குடும்பத்தை அமைத்துக் கொள்ள உதவும் வகையில் அல்லது மேற் படிப்பைத் தொடர இயலும் வகையில் ஒரு மொத்தத் தொகையாக ரூ. 10,000 வழங்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் சுமார் 20,000 குடும்பங்களுக்குப் பயன் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்,

144. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்காக, அரசு புதிய 10 அம்சத் திட்டத்தைச் செயற்படுத்தி வந்துள்ளது. இந்தத் திட்டம் நல்ல வளர்ச்சியை அளித்துள்ளது.

| இனம் | 1991–92-ல் சாதனை |
| --- | --- |
| * பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 65,000 குடும்பங்கள் |
| * 10,000 கிணறுகள் வெட்டும் திட்டம் | 3,000 கிணறுகள் |
| * தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் | 1,000 |
| * தொழில் பயிற்சிப் பள்ளிகளில் கல்வித் தகுதி பெற்று வேலை வாய்ப்பற்று இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் | 1,000 |
| * இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்குதல் | 1,24 இலட்சம் |
| * ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம் | 35,000 |

| | |
|---|---|
| * குடிநீர் வசதி செய்து கொடுத்தல் | 1,418 குடியிருப்புப் பகுதிகள், |
| * இணைப்புச் சாலைகள் அமைத்தல் | 500 |
| * குடியிருப்புப் பகுதிகளுக்குத் தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல் | 357 |
| * குடிசைக்கு ஒரு விளக்கு அளிக்கும் திட்டம் | 30,000 |

145. இந்தப் பத்து அம்சத் திட்டம். இதே இலக்குகளுடன் வரும் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும், ஆதி திராவிடர்களும் பழங்குடியினர்களும் பயனடைவதை உறுதி செய்ய இது சிறந்த வழியாக அமையும்.

146. வரும் ஆண்டில். ரூபாய் 43,81 இலட்சம் செலவில், ஆதி திராவிட வகுப்பு மாணவர்களுக்காக 30 புதிய மாணவ ரில்லங்கள் தொடங்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி), ஆதி திராவிட மாணவரில்லங்கள் ஒவ்வொன்றிற்கும்' நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்கப்படும், ரூ. 12.33 இலட்சம் செலவிலான இத்திட்டம். உடனடியாக செயல் படுத்தப்படும்.

147. நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், உபரி நிலங்கள் என்று அறிவிக்கப்பட்ட நிலங்களை ஒதுக்கப் பெற்றுள்ள ஆதி திராவிட உழவர்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களை மேற்கொள்ளத் தனியார் அமைப்புகள் முன் வந்துள்ளன. அத்தகைய உழவர்கள் நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளக் கடன் உதவி பெறவும், மானிய உதவி பெறவும் நாம் வழிவகை ஏற்படுத்தியுள்ளோம்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்.

148. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குரிய இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், போதிய கல்வி வசதிகளை அளிப்பதேயாகும். பிற்படுத்தப்பட்டோர் மாணவரில்லங்கள் 746-லும் உள்ள வசதிகள் குறித்து விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்தகைய மாணவரில்லங்களுக்கு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று விரைவில் மேற்கொள்ளப்படும். மாணவர்கள் படிக்கும் பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ளவும், தரமான புத்தகங்களைப் பெற இயலும் வகையில், மொத்தம் ரூ. 15 இலட்சம் செலவில் மாணவரில்லங்கள் 746-லும் சிறு அளவிலான நூலகங்கள் ஏற்படுத்தப்படும். இதன் வாயிலாக படிக்கும் பழக்கமும், தரமான புத்தகங்கள் கிட்டும் வசதியும் ஏற்படும். வரும் ஆண்டில் ரூபாய் 23 இலட்சம் செலவில் 13 புதிய மாணவியரில்லங்கள் தொடங்கப்படும்.



149. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஏனைய மத்திய அரசுப் பணித் தேர்வுகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் தனிப் பயிற்சி நிலையம் சிறந்த முறையில் செயல்பட இயலவில்லை. இப்பயிற்சி நிலையத்தை முழு அளவில் நிலையுயர்த்தவும், புதிய வளாகம் ஒன்றில் அதை அமைக்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தை வரும் ஆண்டில் ரூபாய் 35 இலட்சம் செலவில் மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது. படிப்பில் சிறந்த மாணவர்கள் இறுதிச் சுற்றுத் தேர்வுக்கு உரியவாறு பயிற்சி பெற இயலும் வகையில், தொடக்க நிலைத்தேர்வில் சிறப்பிடம் பெற்றுள்ள அத்தகைய மாணவர்களுக்குத் தனியார் நடத்தும் தனிப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கும் புதிய திட்டமொன்றைக் கொண்டுவர நாம் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்திற்காகும் முழுச் செலவையும் அரசு ஏற்கும்.

150. சில வகுப்புகளைச் சேர்ந்த வீடற்ற நபர்களுக்கு வீட்டு மனை வழங்க, வீட்டுமனைகளைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழ்மையுள்ள வீட்டு வசதி அற்ற மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகையைச் சேர்ந்த சமுதாயத்தினர் அனைவருக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த நாம் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின் கீழ் 5,000 வீட்டுமனைகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்படும்.

151. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக புதிதாக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வரும் ஆண்டில் தொடங்கப் படும். இத்திட்டத்தை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மேற்கொள்ளும். பிற் படுத்தப்பட்டோர் வருமான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 5,000 பேருக்கு அவர்களுடைய பொருளாதார நிலையை மேம் படுத்த உதவியளிக்கப்படும்.

## ஏழை மக்களுக்குப் பாதுகாப்பு.

152. நான் இது வரையிலும் அரசின் திட்டங்களையும், பணி களையும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். சமுதாயத்தில் பல்வேறு பிரிவினர்களின் நலனுக்காக எடுக்கப்பட்டுள்ள சிறப்பு நல நடவடிக்கைகள் பற்றியும் நான் எடுத்துக் கூறியுள்ளேன். மாறுதல் அடைந்துவரும் பொருளாதாரத்தில், அதுவும் ஒருநெருக் கடியான கால கட்டத்தைக் கடந்து கொண்டு இருக்கின்ற நிலை யில், ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் பொருளாதாரத்தை நிலைப்படுத்துகின்ற நடவடிக்கைகளால் மிக மிக எளிதில் பாதிப் புக்கு உள்ளாகும் நிலையில் இருப்பவர்கள் ஆவர். ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, நாம் மிக உயர்ந்த முன்னுரிமை கொடுத்துள்ளோம். இல்லாமை யாலும், வறுமையாலும் தமிழகத்தில் தனியொருவர் எவரும் தவிக்கின்ற நிலை, அறவே இல்லாதவாறு உறுதி செய்திட நாம்

மிக விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். ஏழை, எளியவர்களையும், வசதி வாய்ப்பற்றவர்களையும் முழுமையாகப் பாதுகாத்திட எடுக்கப்படுகின்ற இந்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை நாம் வலுப்படுத்தி, விரிவுபடுத்துவோம்.

153. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க, இது வரையில் முதியோர், விதவைகள், ஆதரவு அற்ற மகளிர், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியமான ரூ. 50-ஐ ரூ. 75-ஆக உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி). ஓய்வூதியத்திற்கான ஒதுக்கீடு ரூ. 32.50 கோடி என்பதிலிருந்து ரூ. 52.29 கோடியாக உயர்த்தப்படும். இது தவிர காத்திருப்போர் பட்டியலில் இருக்கும் 27,592 பேருக்கு ஓய்வூதியம் வழங்கவும் நாங்கள் ஆணை பிறப்பித்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி).

154. கருவுற்று இருக்கும் தாய்மார்களுக்கு, ஏற்படுகின்ற ஊதிய இழப்பைச் சரிக்கட்டுவதற்காக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்க உதவியாக மொத்தம் ரூ. 200 வழங்கப்படுகிறது. இந்த ரொக்க உதவி, இனி ரூ. 300 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இத் திட்டத்தின் கீழ் 2 இலட்சம் கருவுற்ற தாய்மார்கள் பயன் பெறுவர். இதற்காகும் கூடுதல் செலவு ரூ. 2 கோடி ஆகும்.

155. 'ஏழை மக்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட மருத்துவத் திட்டம்' என்றொரு புதிய திட்டம் தொடங்கப்படும். இத் திட்டத்தின் கீழ், மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருந்தால், அந்தச் சிகிச்சை, ஏற்பளிக்கப்பெற்ற தனியார் மருத்துவமனையில் செய்யப்படுகின்ற பொழுது, அவருக்கு அரசு ரூ. 15,000 உதவித் தொகையாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

## திருவாகச் சீர்திருத்தம்.

156. நிருவாகம், மக்களிடம் மிக நெருங்கிவர வேண்டும் என்ற எங்களது கொள்கைக்கிணங்க, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, 'நாகப்பட்டினம் காயிதே மில்லத்' மாவட்டம் என்ற புதிய மாவட்டத்தை அமைத்துள்ளோம். தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கக் கருதியுள்ளோம். கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம் 'தென்னார்க்காடு' என்னும் முந்தைய பெயரைக் கொண்டிருக்கும். விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு அமையும் புதிய மாவட்டம், 'விழுப்புரம் வள்ளலார் மாவட்டம்' என்று பெயரிடப் பெறும்.





157. "பட்டா பதிவுப் புத்தகத் திட்டம்" குறித்த பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. உழவர்கள், தங்கள் நிலங்கள் பற்றிய விவரங்களைச் சரியாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்ள, இது ஒரு பெரும் நடவடிக்கையாக அமையும். கிராமப் பகுதிகளில் தடையின்றிக் கடன் வழங்கப் பெறுவதை உறுதி செய்யும் ஒரு சீர்திருத்த நடவடிக்கையாகவும் இருக்கும்.

158. முன்னுரிமை அடிப்படையில், தற்போதுள்ள கிராமக் கணக்கு முறையை எளிமைப்படுத்தும் ஒரு திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம். தற்போதைய நடைமுறை, பழைமையானது ; வாலாயமான மிகப்பல நடைமுறைப் பணிகளைக் கொண்டது. கிராம நிருவாகத்தை எளிமைப்படுத்துவதன் மூலம், மக்களின் தேவைகளில் மிகுந்த நாட்டம் செலுத்த இது வழிவகுக்கும்.

159. நிருவாகம் பொதுமக்கள் குரலுக்குப் பெரிதும் செவிசாய்த்து உடனுக்குடன் செயல்படுவதாக இருக்கும் வகையில், அலுவலக நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் சீர்படுத்தும் பொருட்டு, செயல்திட்டம் ஒன்றை வகுக்க, முக்கியத்துறைச் செயலாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. "பொது மக்கள் குறை கேட்கும் நாள்" தொடர்பான அலுவல் நடைமுறைகளில் காணும் குறைபாடுகளைப் போக்கி, நடைமுறைகளைச் செம்மைப்படுத்துவது பற்றியும், இக்குழு ஆராய்ந்து வருகிறது. இக்குழு பல்வேறு இடங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டு பின்னர் தமது அறிக்கையை விரைவில் இறுதியாக்கும். இக்குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முயலுவோம்.

160. பணியாளர்கள் ஒரு துறையிலிருந்து பிறிதொரு துறைக்கு எளிதில் செல்லும் வகையில், பணியாளர் விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்குவது பற்றி நாங்கள் ஆய்வு செய்ய இருக்கிறோம். இப்போது இந்த நடைமுறைகள் காரணமாக, பலவேளைகளில் ஒரு துறையில் உள்ள உபரிப் பணியாளர்களை வேறு ஒரு துறைக்கு எளிதில் அனுப்பிப் பயன்படுத்திக் கொள்ள முடிவதில்லை. ஒரு துறைப் பணியாளர் பிற துறைகளுக்கு எளிதில் சென்று பணியாற்ற இயலும் வகையில், இந்த நடைமுறை ஏற்பாட்டை எளிமையாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள இருக்கிறோம்.

161. மாவட்ட அளவில் திட்டமிடுவதைப் பரவலாக்குவதற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்திட நாங்கள் முடிவு செய்துள்ளோம். கடந்த பல ஆண்டுகளில் அரசு அலுவல்கள் அதிகரித்துள்ளதாலும் அதற்கேற்ப வரவு செலவுத் திட்டத்தில் திட்டமிதிப்பீட்டு அளவு கணிசமாக உயர்ந்துள்ளதாலும், திட்டமிடும் நடைமுறையைச் செம்மைப்படுத்துவது பற்றி பரிசீலிக்கவுள்ளோம். இதற்கு

முன்னர், அடிப்படை நிலையில் திட்டமிடும் பிரிவு, வட்டார அளவில் இருக்கலாம் என்று கருதப்பட்டது. இது பற்றி நாங்கள் ஆராய்ந்து, மாவட்ட அளவில் திட்டம் வகுப்பதே சிறந்தது என்று முடிவு செய்துள்ளோம். மாவட்டத் திட்டம் தயாரிக்கும் பொறுப்பு மாவட்ட வளர்ச்சி மன்றத்திடம் விடப்படும். இதற்குத் தொழில்நுட்ப வல்லுநர்கள் உதவிபுரிவார்கள். வட்டார அளவிலும் ஊராட்சி அளவிலும் போடப்படும் திட்டம், மாவட்டத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்படும்.

## வேலைவாய்ப்பு

162. கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நடப்பாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மனநிறைவளிக்காத சூழ்நிலையில் வேலைவாய்ப்பு நிலைமை, அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. தொழில் நுட்பத்தின் முன்னேற்றம், உலக நாடுகளின் பொருளாதாரத்துடன் இந்தியப் பொருளாதாரத்தை ஒருங்கிணைத்தல் ஆகியவையும்கூட, வேலை வாய்ப்பு வசதிகள் குறித்து ஐயப்பாட்டினை எழுப்பியுள்ளன. இந்தச் சிக்கல் வாய்ந்த நிலையைப் புதிய முன்னேற்ற நிலைமையுடன் சரிக்கட்டிச் செல்வதில் சில இடர்பாடுகள் இருக்கலாம்; அவற்றை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. வேலைவாய்ப்பு குறித்த மாற்றுத் திட்ட அணுகுமுறை ஒன்றை உருவாக்குவது அவசியமாகிறது.

163. வேளாண்மை வணிக வளர்ச்சியை மேம்படுத்த ஒரு அமைப்பு ஏற்படுத்துவது குறித்து மத்திய நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டத்தில் தமிழ்நாடு சேர்க்கப்பட வேண்டும். கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்களை அதிகப் படுத்தக்கூடிய வகையில் வேளாண் வணிகத்தில் அதிக நிறுவனங்களை மேம்படுத்தவும் திட்ட அணுகுமுறை அமையவேண்டும். வல்லுநர்களது உதவியுடன் இத்திட்டத்தை நாம் தொடங்க இருக்கிறோம்.

164. நடப்பாண்டில் பரவலாக வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த நாம் பல்வேறு புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். ஒரு இலட்சம் பேருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதியினை அளிக்க, கிராமத் தொழில் துணைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பு வசதியினை அளிக்க ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் தொடங்கியுள்ளார். ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு வசதியளிக்கும் தனித் திட்டத்தினால் 65,000 பேர் பயனடைவர். இத்திட்டங்கள், மேலும் வேலைவாய்ப்பளிக்க வரும் ஆண்டிலும் தொடரும். பெரிய அளவில் வேலைவாய்ப்பளிக்கும் சிறப்புத் திட்டங்களைக் கொண்டு பொருளாதாரத்தை நிலைப்படுத்தும் நடவடிக்கைகளைச் சமாளிப்பது என்பது நமது திட்ட அணுகுமுறையைச் சேர்ந்த ஒன்றாகும்.



165. கிராமப்பகுதிகளில், குறிப்பாக நிலமற்ற வேளாண்மை தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில், பல்வேறு ஊரகப் பணித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் என்பது ஒரு பெரும் திட்டமாகும். சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் ஒன்றையும் நாம் செயல்படுத்தி வருகின்றோம். ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1992-93ல் குறைக்கப்படக்கூடும் என்பது நமக்குத் கவலையை அளித்துள்ளது. இதற்குத் தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து (National Renewal Fund) துணை நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளித்துள்ளார். ஊரகப் பணித் திட்டங்களால், பெரும்பாலான கிராமப்புற ஏழை, எளிய மக்கள் குறைந்தளவுக்காவது ஊதியங்களைப் பெற்று வருவதால், இத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைக்காமல் இருக்குமென நான் எதிர் பார்க்கிறேன்.

166. விலை உயர்வால் ஏற்படக்கூடிய பாதகமான நிலையைச் சமாளிப்பதற்கான நம் முயற்சியின் ஒரு பகுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிய உறுதியான வேலைவாய்ப்புத் திட்டமொன்றை ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். மகாராட்டிர மாநிலத்திலுள்ள வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் மாதிரியில் வகுக்கப்பட்டுள்ள இத் திட்டம், முதல் கட்டமாக, தருமபுரி, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், புதுக்கோட்டை, மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். பல்வேறு திட்டப்பணிகளின் கீழ், மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து விரிவான திட்டம் ஒன்று தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள். ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும் வகையில், இப்பணிகள் வேளாண்மைப் பருவ நிலைகளுக்கு ஏற்ப வகுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், கிராமப்புற நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றிலும் ஒருவருக்காவது உத்தரவாத வேலைவாய்ப்பு அளிக்க முயற்சி மேற்கொள்ளப்படும். அவர்கள் அருகில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொண்ட பிறகு, திட்டம் தொடங்கிய உடன், நாள் ஒன்றுக்குத் தினக்கூலி ரூ. 14 கிடைக்கும் வகையில் முறையாக வேலை கொடுக்கப்படும். குறிப்பிட்ட பகுதியில் திட்டம் தொடங்கிய பின் தொடர்ந்து 7 நாட்களுக்கு வேலைகொடுக்க முடியாமலிருக்கும்போது, நாள் ஒன்றுக்கு குறைந்த அளவு கருணைத் தொகை ரூ. 2 வழங்கப் படும். வரும் ஆண்டில், இத்திட்டத்திற்காக முதற்கண் சிறப்பு ஒதுக்கீடாக ரூ. 10 கோடி ஒதுக்கியுள்ளோம். இத்திட்டத்திற்கும், தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி நல்குமாறு மத்திய அரசை வலியுறுத்த இருக்கிறோம். அவர்களிடமிருந்து இந்த உதவி கிடைக்குமென்பதில் எனக்கு ஐயமேதும் ஏற்படவில்லை.

## அரசுப் பணியாளர்களுக்கான நன்மைகள்.

167. ஐந்தாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்த கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலனை செய்யும் பணியை நாம் அலுவலர் குழு ஒன்றிடம் ஒப்படைத்துள்ளோம். பல்வேறு பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விரிவாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். குழுவின் அறிக்கையும் தற்போது அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் மீது அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

168. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள 2.15 இலட்சம் பகுதிநேரப் பணியாளர் உட்பட, மொத்தம் 2.72 இலட்சம் பகுதிநேரப் பணியாளர்கள் உள்ளனர். நான் முன்னரே கூறியுள்ளபடி இந்தப் பகுதிநேரப் பணியாளர்கள் அகவிலைப்படி உயர்வுக்குத் தகுதியுடையவர் அல்லர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள பகுதிநேரப் பணியாளர்களை பொறுத்தவரையில், மதிப்பூதிய தனி உயர்வு ஒன்றை நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். மாதமொன்றுக்கு ரூ. 150-க்கும் அதிகமாக மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர்களுக்கும், மாதமொன்றுக்கு ரூ. 150-க்கும் குறைவாக மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர்களுக்கும் முறையே மாதமொன்றுக்கு ரூ. 20, ரூ. 10 மதிப்பூதியத் தனி உயர்வு ஒன்றை இவ்வரசு வழங்கும். இதற்காகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 1.35 கோடியாக இருக்கும். உள்ளாட்சி மன்றங்களின் பகுதிநேரப் பணியாளர்களுக்கும் இது பொருந்தும். இது, 57,000 பகுதிநேரப் பணியாளர்களுக்கு பயன் அளிக்கும். இந்த மதிப்பூதியத் தனி உயர்வு 1–4–1992 முதல் செயலுக்குவரும்.

169. அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடிய பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். பல்வேறு சம்பள நிலைகளில் உள்ளவர்கள் செலுத்தத்தக்க குறைந்த அளவு பங்குத் தொகையின் அளவு, கடந்த முறை 1976 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதாகும். சம்பள வீதங்களிலும், ஊதியங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை யொட்டி, இவற்றையும் திருத்தி அமைக்க வேண்டியுள்ளது. ஊதிய உயர்வைக் கருதிப் பார்க்கையில், வருங்கால வைப்பு நிதியில் வைப்பீடு செய்யப்பட வேண்டிய மாதாந்திர குறைந்த அளவு சேமிப்புத் தொகை அளவைத் திருத்தி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இது வருமான வரிச் சட்டத்தின் கீழ் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்களை ஒத்ததும் ஆகும். இக்கருத்தைப் பணியாளர் சங்கங்கள் வரவேற்றுள்ளன. எவ்வித இடர்ப்பாடும் இன்றி இதிலிருந்து தற்காலிகமாகப் பணம் பெறுவதை எளிதாக்க உள்ளோம்.





170. வீடுகட்டுவதற்கான முன்பணம் வேண்டி அரசுப் பணியாளர்களிடமிருந்து கணிசமான அளவில் கோரிக்கைகள் வருகின்றன. வீடு கட்டுவதற்கான முன்பணம் குறித்த ஒதுக்கீட்டை நடப்பாண்டு அளவான ரூ. 18.89 கோடியிலிருந்து வருமாண்டிற்கு ரூ. 25 கோடியாக உயர்த்தியுள்ளோம். அரசுப் பணியாளர்கள் ஏற்பளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற இப்போது வகை செய்துள்ளோம். இந்த வகைக் கடன்களுக்கான வசூல் தொகை, சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யும் வகையில் இருக்க வேண்டுமென இந்த நிறுவனங்கள் வலியுறுத்தின. ஏற்பளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிடமிருந்து வீடு கட்டுவதற்கான கடனை அரசுப் பணியாளர்கள் பெறும் வகையிலான இந்த நடைமுறை ஏற்பாட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

171. சிலவகையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் கணினியைச் சொந்தமாக வாங்க உதவும் பொருட்டும் நாம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளோம். இது, அவர்கள் தங்களுடைய பணியை சிறந்த திறமையுடன் செய்வதற்குத் துணைபுரியும்.

172. அரசு ஊழியர்களுக்குக் கிடைத்துவரும் விடுப்பு பயணச் சலுகையின்கீழ், அரசு பயணச் செலவை மட்டுமே ஏற்றுவருகிறது. இதுபோல பயணம் செல்லும்பொழுது அரசு ஊழியர்கள் நல்ல இடவசதி பெறுவதில் இடர்ப்பாடுள்ளது. இனி, இதன்பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்றுவரும் பல்வேறு சுற்றுலாப் பயணத் தொகுப்பு ஏற்பாடுகள் அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும். இந்தச் சுற்றுலாப் பயணத் தொகுப்பின் கீழ், போக்குவரத்து வசதியும் தங்கும் இடவசதியும் கிடைக்கும்.

## கடன் திட்டம்

173. முன்னுரிமைத் துறைகளுக்குத் தடையின்றிக் கடன் வழங்கப்படுவதன் முக்கியத்துவம்பற்றி, எனது கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் சுட்டிக்காட்டினேன். நடப்பாண்டில், வேளாண்மை, மற்றும் அதனைச் சார்ந்த பணிகள், தொழில்கள், பணிகள் ஆகியவற்றிற்கான ரூ. 2,154.84 கோடி கடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு திட்டங்களின்கீழ், ஏழை எளியவர்களுக்குத் தங்குதடையின்றிக் கடன் கிடைப்பதை, இத் திட்டம் உறுதி செய்யும்.

174. இருத்தியமைக்கப்பட்டுள்ளவாறு, மொத்தக் கடனில், 10 சதவீதம் மட்டுமே முன்னுரிமைத் துறைகளுக்கு வழங்கப்படலாம் என்று நிதி ஏற்பாட்டுக் குழு தெரிவித்த பரிந்துரைகள் குறித்து, நாம் பெரிதும் கவலை கொள்கிறோம். தற்போது முன்னுரிமைத் துறைக்கு அளிக்கப்பட்டுவரும் கடன், மொத்தக் கடன் அளவில், 40 சதவீதம் ஆகும். கடந்த காலத்தில், வங்கி

தொகைமுறையின்றிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதே, இந்நிலைமைக்குக் காரணமாகும். முன்னுரிமைத் துறைகளுக்கு நிதி வழங்கும் வகையில், வங்கி அமைப்புகள் ஊக்கப்படுத்தப் படவேண்டும். அதேநேரத்தில், முன்னுரிமைத் துறைகளுக்குத் தங்குதடையின்றிக் கடன் வழங்குவதில் கடுமையான அளவுக்குக் குறைவு ஏற்படக்கூடாது. இதுகுறித்து தேசிய அளவில், கருத்தினை உருவாக்குமாறு நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள இருக்கிறோம். ஏழை எளியவர்களின் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்குக் கடன் கிடைக்க இயலும் வகையில், பெரும்பாலான மாநில அரசுகள் அவர்களுக்கு நிதியுதவி அளித்து வருகின்றன. திடீர் மாற்றம் ஏதேனும் செய்யப்படுமானால், அது பெரிதும் துன்பமளிக்கக் கூடும்.

175. கடந்த காலத்தில் கடன்களைத் தள்ளுபடி செய்ததன் மூலம், இம் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாட்டினைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுக் கடன்கள் மொத்தம் ரூ. 289 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. இதற்கெதிராக, மத்திய அரசிடமிருந்து ரூ.218.29 கோடி மட்டுமே வரப்பெற்றது. மீதமுள்ள தொகை இன்னும் வரப்பெறவில்லை. பெற்ற தொகையில் 50 சதவீதத்தை 3 ஆண்டுத் தவணைகளில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டும். முதல் தவணைத் தொகை 1991 மார்ச்சில் செலுத்தப்பட்டது. இரண்டாவது தவணைத் தொகை ரூ. 49.06 கோடி 1992 மார்ச்சில் செலுத்தப்பட வேண்டும். இத் தவணைத் தொகையைச் செலுத்துவதை ஒத்திப்போடுமாறு மாண்புமிகு மத்திய நிதியமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இம் மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள மிகுந்த நிதி இடர்ப்பாட்டினைக் கருத்தில் கொண்டு, இந்த வேண்டுகோள் மீது விரைந்து முடிவு எடுக்கப்படும் என்று நம்புகிறோம்.

176. வழக்கத்திற்கு மாறாக, அடிக்கடி இப்படிக் கடன் தள்ளுபடி செய்தது. கடன் ஏற்பாடு முழுமைக்கும் தீங்குபயப்பதாக முடிந்துள்ளது. எனவே அடிக்கடி ஏற்படுகிற பயிரிழப்புகளிலிருந்து உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையான ஏற்பாடு ஒன்றினைக் கொண்டுவர வேண்டும். உழவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நிலைத்த ஏற்பாட்டிற்கு வகை செய்யும் தேசியக் கடன் நிவாரண நிதி (NACREF) ஏற்படுத்துவது பற்றி மத்திய அரசு இன்னும் முடிவு செய்யவில்லை. நடப்பாண்டில் மழையும் நன்கு பெய்துள்ளது. விளைச்சலும் நன்றாகவுள்ளது ; இதைப்போன்ற நல்ல பலன்கிட்டும் ஆண்டுகளிலாவது விவசாயிகள் கடன்களை அடைக்க முன்வர வேண்டும் ; அதன் மூலம், கடன் திட்டத்திற்குச் சீர்குலைவு ஏற்பட்டுவிடாமல் காக்க வேண்டும்.

177. பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு விரைவாகவும், முறையாகவும் நிவாரணம் கிடைக்கும் வகையில், தற்போது பொதுக் காப்புறுதிக் கழகம் செயல்படுத்தி வருகின்ற பயிர்க் காப்புறுதித் திட்டம், திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். பயிர்ச்





சேதத்திற்கு வழங்கப்படுகிற நிதியுதவிக்கான நடைமுறைகள் திருத்தப்பட வேண்டும். உழவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் செயல்பாட்டை மேம்படுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள இருக்கிறோம்.

178. ஒரு இலட்சம் பேருக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய ஊரகத் தொழில்கள் துணைத் திட்டத்தை நாம் செயல்படுத்தியுள்ளோம். இத் துணைத் திட்டத்தின்கீழ் நல்ல பயன் கிட்டியுள்ளது. வரும் ஆண்டிலும் இத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம். இத் துணைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படக்கூடிய திட்டவட்டமான பணிகளைக் கண்டறியும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 'நாபார்டு' நிறுவனம் வகுத்தளிக்கும் வள வாய்ப்புகள் இணைந்துள்ள திட்டத்தை நாம் சார்ந்திருப்போம். வரும் ஆண்டில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு அளிக்ககருதியுள்ளோம்.

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

179. நிதிநிலைமை மிகவும் இடர்பாடுடையதாக இருந்த போது, இவ்வரசு பதவியேற்றது. ரூ. 1,600 கோடிக்குத் திட்ட ஒதுக்கீட்டின் அளவை ஏற்படுத்த வேண்டிய நிலையில், நம்முடைய மொத்தப் பற்றாக்குறை, ரூ. 1,220 கோடியாக இருந்தது. இந்நிலைமையைச் சமாளிப்பது என்பது உண்மையிலேயே பெரும் இடர்பாடுடையதாகும். அரிசி, பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்தியதானது, நம்முடைய பணியின் கடுமையை இருமடங்காகப் பெருக்கியுள்ளது. 1991-92ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீடு குறைக்கப்படமாட்டாது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னரே தெளிவுபடுத்தியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) நிதிநிலைமையைச் சரிசெய்யவும், தமிழகத்தை மீண்டும் வளர்ச்சி வழியில் இட்டுச்செல்லவும் துணிவான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகியது.

180. வருவாய்க் கணக்கில், மொத்த வரவுகள் ரூ. 5,347.34 கோடி என்பதையும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவுகள் ரூ. 6,249.83 கோடி என்பதையும், இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 902.49 கோடியாகும் என்பதையும், 1991-92 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஏனைய கணக்குகளில் உள்ள நிகர பற்றுவரவுகளையும் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த ரூ. 207.94 கோடி பற்றாக் குறையையும் சேர்த்து, மொத்தப் பற்றாக்குறை, ரூ. 785.35 கோடியாகும். இப் பற்றாக்குறையை ரூ. 575.35 கோடியாக

குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்பே நான் அறிவித்திருந்தேன். முன் எப்போதும் கண்டிராத வகையில் ஏற்பட்டுள்ள நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசு நிதியுதவி அளிக்க முன்வரும் என நாங்கள் பெரிதும் நம்பியிருந்தோம்.

181. இக் கடுமையான நிதிநிலையைச் சமாளிக்க மத்திய அரசிடமிருந்து தனி நிதியுதவி எதனையும் நாங்கள் இதுவரை பெறவில்லை. இந் நிதிநிலைமையைச் சீர்செய்ய விரைவாகவும், செம்மையாகவும் செயல்பட வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் ஆட்பட்டோம். வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ. 5,879.52 கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ. 6,529.57 கோடியாகும் என்பதையும் இதில் பற்றாக்குறை ரூ.650.05 கோடியாகும் என்பதையும் 1991-92ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகள் காட்டுகின்றன. ஆண்டின் தொடக்கத்தில் இருந்த பற்றாக்குறையையும், ஏனைய கணக்குகளில் உள்ள நிகரப் பற்றுவரவுகளையும் சேர்த்து, 1991-92ஆம் ஆண்டின் முடிவில் இறுதிநிலைப் பற்றாக்குறை ரூ. 401.47 கோடியாகும்.

182. 1992-93ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 6,446.54 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூ. 7,255.27 கோடி எனவும், இதன் காரணமாகப் பற்றாக்குறை ரூ. 808.73 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய கணக்குகளில் உள்ள நிகரப் பற்றுவரவுகளைக் கருத்தில் கொண்டு, 1992-93-ல் பற்றுவரவுகளில் ஏற்படும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ. 217.62 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1991-92 திருத்த மதிப்பீடுகளின்படியான இறுதிநிலைப் பற்றாக்குறை ரூ. 401.47 கோடியுடன் சேர்த்து 1992-93ஆம் ஆண்டின் முடிவில் ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூ. 619.09 கோடியாக இருக்கும்.

183. 1992-93ஆம் ஆண்டில், அனைத்துப் பற்றுவரவுகளின் நிகரப் பற்றாக்குறையையும் கட்டுப்படுத்துவதில் நாம் வெற்றி பெற்றுள்ள அதே சமயம், நடப்பாண்டில், நாம் சந்தித்துள்ள இடர்பாடுகள், வரும் ஆண்டில் தொடர்ந்து நமக்குக் கடுமையான பிரச்சினையை உண்டாக்கும். தமிழ்நாடு மின் வாரியத்தில் ஏற்பட்ட ஈடுசெய்யப்படாத பற்றாக்குறைத் தொகையான சுமார் ரூ. 80 கோடி இந்த மொத்தப் பற்றாக்குறைத் தொகையான ரூ. 619.09 கோடியில் அடங்காது.

184. நாங்கள் ஒட்டுமொத்த நிதிநிலைமையைக் கவனமுடன் ஆராய்ந்துள்ளோம். நடப்பாண்டில் நாம் சந்தித்துள்ள மிகவும் கடுமையான நிதிநிலைமையைச் சமாளிக்க, மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி நமக்கு அவசியமாகும். இக்கட்டான



இந்த நிதிநிலைமையைச் சமாளிக்கத் தொகுப்பு நிதியுதவி பெற வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரையும், மாண்புமிகு மத்திய நிதியமைச்சரையும் சந்தித்துள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய வேண்டுகோளை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றின்மூலம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நடப்பு நிதியாண்டின் முடிவுக்குள் மத்திய அரசு ஏதேனும் நிதியுதவி வழங்குமென நாங்கள் இன்னும்கூட நம்பிக்கையுடன்தான் இருந்து வருகிறோம்.

185. 1987-88 ஆம் ஆண்டு முதற்கொண்டு, தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை இருந்து வந்துள்ளது. இது மேலும் ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்நிலை, கடன்களைத் திரட்டுவதன் மூலம் சமாளிக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் கொடுக்க வேண்டிய வட்டிச்சுமை அதிகரித்து வந்துள்ளது. வருவாயைப் பெருக்க மாநில அரசுகளுக்கு ஒரு சில வழிவகைகளே இருப்பதால், வருவாயைப் பெருக்குவது இடர்ப்பாடான ஒன்றாக உள்ளது. நம்முடைய செலவைக் குறைப்பதும், இழப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதும் ஆன ஒரே வழிதான் உள்ளது. இத்தகைய பின்னணியில், நம்முன் உள்ள பற்றாக்குறையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

186. பல்வேறு உதவித்தொகைகளும், இலவச மானியங்களும் வழங்குவதால் நமக்குப் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்கள் அறிவர். மிக்க ஏழைகளையும், அறவே வசதி வாய்ப்பற்றவர்களையும் பாதிக்கக்கூடிய வகையில், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படமாட்டா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்துளளார். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில் மிகவும் இடர்ப்பாடான நிதிநிலையாலும், பெருகி வரும் கடன்சுமையாலும் சிக்கித் தவிக்கும் நாம் இனிமேல் செலவுகளின் அதிகரிப்பைத் திரும்பப் பெறும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

187. நடப்பாண்டில் உணவு உதவித் தொகைக்கான நிதியொதுக்கம் ரூ. 346 கோடி என்பதை உறுப்பினர்கள் அறிவர். 1992-93 ஆம் ஆண்டில் உணவு உதவித் தொகையாக வழங்கப்படவேண்டிய தொகை ரூ. 503 கோடியென்று வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிட்டுள்ளோம். இதில் அடுத்த ஆண்டிற்கான தொகை ரூ. 343 கோடியும் நடப்பாண்டில் கொடுக்க இயலாமல் நிலுவையாக உள்ள தொகை ரூ. 160 கோடியும் அடங்கும். இத்தகைய சூழ்நிலையில் பொது விநியோக முறையின்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1992 மார்ச் 6

வழங்கப்படும் மிகவும் மலிவு விலையிலான அரிசி ஏழை எளிய வர்களுக்கு மட்டும் கிடைக்கும் வகையில் இந்த முறையை மாற்றி அமைப்பது குறித்து நாம் கருதிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

188. அரசுச் செலவில் சிக்கனம் கடைப்பிடிக்கப்பட வேண்டியுள்ளது. வரும் ஆண்டில் ரூ. 55 கோடி மிச்சப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளக் கருதியுள்ளோம். இதன்பொருட்டு பலவகைப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கொண்டுவரப்படும். சிக்கன நடவடிக்கைகள், மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்துவது குறித்தும், பயணச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது குறித்தும் மேற்கொள்ளப்படும். உற்பத்தி நோக்கில் அமையாத செலவுகள் அனைத்தையும் கண்டறிந்து களைவதற்காகச் செய்யும் செலவிற்குரிய பயன் கிட்டும் அடிப்படையில் வரவு–செலவுத் திட்டம் தயாரிக்கும் முறையை நாங்கள் தொடர்ந்து பின்பற்றுவோம். இத்தகைய சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், பற்றாக்குறையை ரூ. 564.09 கோடி என்ற அளவிற்குக் கொண்டு வருவோம்.

189. பல நிதியுதவித் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்குமாறு மத்திய அரசைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், இந்தப் பற்றாக்குறையை ஓரளவிற்காவது குறைக்க ஏனைய சில நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது.

190. மிக்க ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் அளிக்க நாம் எப்போதும் முயன்று வந்துள்ளோம். மாநில வளர்ச்சிக்கு உதவ முடிந்த வசதியுடையவர்கள் மட்டுமே தங்கள் பங்கிற்கு உரியதைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்கள். பொருளாதாரம் விரைந்த வளர்ச்சியைப் பெற நம்முடைய வரிவிதிப்புக் கொள்கைகளும், வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படும்.

## வரிகள்.

191. நிதி நிலை அறிக்கையில் ஏற்படும் பற்றாக் குறையை ஈடு கட்டுவதற்கு நிதி அமைச்சர்கள் வழக்கமாக விற்பனை வரியைத்தான் நாடுவார்கள். நான் சில பொருட்கள் மீதான விற்பனை வரி விகிதங்களைக் குறைக்க முடிவு செய்துள்ளேன். விலைவாசி ஏற்றத்தைக் குறைக்கவும் அதே நேரத்தில் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கவும் நாம் முயன்று வருகிறோம்.

192. இல்லத்தரசிகள் விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க ஆவலோடு அரசிடமிருந்து உதவி எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே சில வீட்டு உபயோகப் பொருள்களின் மீதான வரி விகிதங்களைக் குறைக்க முடிவு செய்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி.)



1992 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

*மளிகைப் பொருள்களின் (அட்டவணை I மற்றும் IIல் சேராதவை) மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

*வர்த்தக வணிகப் பொருள் குறிகள் சட்டத்தின் (Trade and Merchandise Marks Act, 1958) கீழ் பெயர் பதிவு செய்யப்படாத நெய் மற்றும் இதரப் பால் பொருட்கள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

*வெந்தயம் மற்றும் கிராம்பு நம்முடைய உணவில் தினந்தோறும் சேர்க்கப்பட்டு வருகிறது. இவைகள் மீதான வரியை 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்க முடிவு செய்துள்ளோம், (மேசையைத் தட்டும் ஒலி.)

*குச்சிக் கிழங்கு வறுவல் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி),

* நமது வீடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சேமியா மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி.),

193. குங்குமப் பொடிக்கு ஏற்கனவே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது, இதரக் குங்குமங்கள் மற்றும் கண் மை இவற்றிற்குத் தற்பொழுது 8 சதவீத வரி விதிக்கப்பட்டுகிறது, கண் மைக்கும் எல்லாவிதமான குங்குமங்களுக்கும் வரி விதிப்பிலிருந்து முழுமையான விலக்கு அளிக்க முடிவு செய்துள்ளோம், (மேசையை தட்டும் ஒலி) மகளிர் இதனைப் பெரிதும் வரவேற்பார்கள் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

தற்பொழுது மகளிரிடையே கவரிங் நகைகள் பெரிதும் பரவலாக உபயோகத்தில் உள்ளன, கவரிங் நகைகள் மீதான வரி விகிதத்தை 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைப்பதற்கு முடிவு செய்துள்ளோம், இதையும் மகளிர் பெரிதும் வரவேற்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

194, லேமினேட் செய்யப்பட்ட (Laminated) சாக்குப் பைகளுக்குத் தற்பொழுது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது, பெரும்பாலான மற்றச் சிப்பப் பொருள்களுக்கு (Packing Materials) 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது, இதனையொட்டி லேமினேட் செய்யப்பட்ட சாக்குப் பைகள் மீதான வரி விகிதம் 5 சதவீதமாகக் குறைக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி).

195. மோட்டார் கார்களுக்குத் தற்பொழுது 5 சதவீத விற்பனை வரி விதிக்கப்படுகிறது, ஆனால் வாடகைச் சீருந்து (T?xi) களுக்கு இது 15 சதவீதமாக உள்ளது, வாடகைச் சீருந்துகளுக்கு இதனை 5 சதவீதமாகக் குறைக்க முடிவு செய்துள்ளோம், (மேசையைத் தட்டும் ஒலி), டிராக்டர்கள் மீதான நுழைவு வரி 12 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி) பின்புறத்தில் சுமை ஏற்று இயந்திரம் (R ar lc?der) சரக்கைக் கவிழ்த்துக் கொட்டும் வண்டி (dump r), மண் அகற்றும் ஊர்தி (Scraper) இவற்றின் மீதான வரி 9 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும், (மேசையைத் தட்டும் ஒலி).

196. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பச்சை உரிவைகள் தோல்கள் (Hides and Skins) மற்றும் பதனிடப்பட்ட உரிவைகள் தோல்கள் மீதான வரி விகிதம் திருத்தி அமைக்கப்பட்டது. பச்சை உரிவைகளும், தோல்களும் பெருவாரியான இனங்களில் பிற மாநிலங்களில் வாங்கப்பட்டு. வரி செலுத்தப்பட்டு நமது மாநிலத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. தோல் தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகப் பதனிடப்பட்ட உரிவைகள் தோல்கள் மீது சலுகை முறையில் 1 சதவீத வரி விதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

197. இதுவரை குறிப்பிட்ட சலுகைகளினால் அரசுக்கு ஆண்டுக்குச சுமார் ரூ, 4 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்,

198, இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது வகைகள் மீது தற்போது கடைசிக் கட்டம் தவிர்த்து மற்ற ஒவ்வொரு கட்டத்திலும் 25 சதவீத விற்பனை வரி விதிக்கப்படுகிறது, இது 30 சதவீதமாக உயர்த்தப்படும், (மேசையைத் தட்டும் ஒலி),

199. தமிழ்நாடு பொது விற்பனை வரிச சட்டம் 1959 பிரிவு 3(3)-ன் கீழ் மூலப்பொருள்களுக்கு படிவம்(XVII)கீழ் உறுதி மொழி கொடுக்கப்பட்டால் சலுகை விகிதமான 3 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. கருப்பஞ் சாற்றுக் கசண்டுக்கு (Mol?sses) பொதுவாக 25 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. கள்ளச் சாராயம் காய்ச்ச முற்படுவோர் இச்சலுகையைத் தவறான முறையில் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே விற்பனை வரிச் சட்டப் பிரிவு 3(3)ன் கீழ் இதற்கு அளிக்கப்படும் சலுகை நீக்கப்பட்டு 25 சதவீதம் விற்பனைவரி விதிக்கப்படும். (மேசையை தட்டும் ஒலி).

200. கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் மீதான வரி விகிதம் குறித்த நிலையைத் தெளிவாக்க உத்தேசித்துள்ளோம், தற்பொழுது கோதுமைக்கு மட்டுமே வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்கும். கோதுமைக்



பொருட்களான கோதுமை மாவு, ரவை, மைதா, ஆட்டா முதலானவற்றிற்குத் தொடர்ந்து 4 சதவீத விற்பனை வரி விதிக்கப்படும்.

201. தற்பொழுது ஆண்டொன்றிற்கு ரூ. 18.25 இலட்சத்திற்கு மேல் மொத்த விற்பனை செய்கின்ற ஓட்டல்களிலும், உணவு விடுதிகளிலும் உணவு மற்றும் குளிர் பானங்கள் மீது 5 சதவீத விற்பனை வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த வரி விலக்கு அளவு மிகவும் அதிகமெனக் கருதப்படுகிறது. கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் வரி விலக்கு அளவு ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சம் ஆகும். எனவே நமது மாநிலத்திலும் இந்த வரி விலக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 18.25 இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சமாகக் குறைக்கப்படும்.

202. மக்களிடமிருந்து வணிக வரி வசூலிக்கப்பட்டுவிட்ட நிலையில் சில இனங்களில் வரி விதிப்பு குறித்து நீதி மன்றங்களில் வழக்குகள் தொடரப் படுகின்றன. இத்தகைய இனங்களில் வசூலிக்கப்பட்ட வரியை அரசாங்கத்திடம் செலுத்துவதுதான் முறையானது. இதனை அரசிடம் ஒப்படைக்க வகை செய்யும் ஒரு புதிய சட்டப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

203. வணிக வரி ஆணையாளருக்குக் கீழ்ப்பட்ட எந்த அதிகாரியாலும் இடப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்யும் அதிகாரத்தை வணிக வரி ஆணையாளருக்கு அளிக்கும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை மாற்றி அமைக்க உள்ளோம். கீழ் நிலையில் உள்ள அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்க இது அவசியமாகிறது.

204. விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிற்கு விற்பனை வரி அமைப்பு மற்றும் விற்பனை வரி விதிப்பு ஆகியவற்றை முழுமையான அளவில் ஆய்வு செய்யும் வகையில் விரிவான ஆய்வு எல்லை வகுக்கப்பட்டுள்ளது. கூடுதல் விற்பனை வரி என்பது வரி விதிப்புக்கு உட்பட்ட விற்பனை அளவின் மீதான வரியாகும். இதனை நுகர்வோரிடமிருந்து வசூலிக்கக்கூடாது. இதனை நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. இக் கோரிக்கை விற்பனை வரிச் சீர்திருத்தக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும்.

205. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 50 கன சென்டி மீட்டர் கொள்ளளவு மற்றும் அதற்குக் குறைவான இயந்திர இரு சக்கர வாகனங்கள் மீதான வாகன வரிக்கு முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்டது. மத்திய அரசு இயந்திர இரு சக்கர வாகனங்கள்

மீது கொள்ளளவின் அடிப்படையில் ஆயத் தீர்வையை மாற்றி அமைத்துள்ளது. இம் மாற்றத்தை கருத்தில் கொண்டு நமது மாநிலத்தில் உள்ள வரி விகிதங்களைக் கொள்ளளவின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மேலும் சீரமைக்க உத்தேசித்து உள்ளோம் :—

| இயந்திர இரு சக்கர வாகனத்தின் கொள்ளளவு. (க.செ.மீ.) | | தற்போது விதிக்கப் படும் வரி விகிதம். (ஆண்டொன்றுக்கு) ரூபாய் | புதிய வரி விகிதம் ரூபாய் |
|---|---|---|---|
| 50–க்கு மேல் 75 வரை | .. | 150 | 125 |
| 75–க்கு மேல் 170 வரை | .. | 150 | 180 |
| 170–க்கு மேல் 300 வரை | .. | 200 | 210 |
| 300–க்கு மேல் | .. | 300 | 210 |

இந்த மாற்றங்களுக்கேற்ப புதிய வாகனங்கள் மீதும் பழைய வாகனங்கள் மீதும் விதிக்கப்படும் ஆயுட்கால வரிகளும் மாற்றியமைக்கப்படும்.

206. மோட்டார் வாகன வரி அமைப்பில் ஒரு சிறிய மாறுதலைச் செய்யக் கருதியுள்ளோம். 700 கிலோவுக்குக் குறைவான எடையுள்ள மோட்டார் வாகனங்கள் மீது விதிக்கப்படும் வரி ஆண்டொன்றுக்குத் தற்போது ரூ. 300 என்ற அளவில் உள்ளது. இனிமேல் இது ஆண்டொன்றுக்கு ரூ. 400 ஆக மாற்றியமைக்கப்படும். இதனையொட்டி நிறுவனங்களுக்குச் சொந்தமான இதே பிரிவைச் சார்ந்த மோட்டார் வாகனங்கள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூ. 600–லிருந்து ரூ. 800 ஆகவும், இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூ. 900–லிருந்து ரூ. 1,200 ஆகவும் மாற்றி அமைக்கப்படும்.

207. பேருந்து வாகன வரி மீதான மேல் வரி தற்போது கிராமப்புறங்களில் இயங்கும் பேருந்துகளுக்கும் விரைவுப் பேருந்துகளுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற விகிதத்தில் வசூலிக்கப்படுகின்றது. இனிமேல் பேருந்து வாகன மேல் வரியானது அடிப்படை வரியில் 25 சதவீதம் என இருக்குமாறு திருத்தி அமைக்க உத்தேசித்துள்ளோம். மாநகரப் பகுதிகளில் இயங்கும் பேருந்துகள் தவிர மற்ற எல்லாப் பேருந்துகளுக்கும் இந்த வரி விகிதம் பொருந்தும்.

வாகன வரி விதிப்பில் உள்ள மாற்றங்கள் அனைத்தும் 1–4–1992 முதல் அமலுக்கு வரும்.



208. சில குறிப்பிட்ட வகையான பத்திரங்கள் மீதான முத்திரைத்தாள் வரி விகிதத்தை மாற்றி அமைக்க உத்தேசித்துள்ளோம். தற்போது சிலவகையான குத்தகை, உடமை இல்லாத அடமானம், பாகப் பிரிவினை, விடுதலைப் பத்திரம், குடும்ப அங்கத்தினருக்குள் ஏற்பாடு ஆவணம் முதலானவற்றின் மீது விதிக்கப்படும் 3 சதவீத முத்திரைத்தாள் வரி 4 சதவீதமாக மாற்றியமைக்கப்படும். இதர சில பத்திரங்களுக்கு நிலைப்பட்ட விகிதத்தில் முத்திரைத் தாள் வரி விதிக்கப்படுகின்றது. இதனைத் தகுந்த முறையில் மாற்றியமைக்க இருக்கிறோம். கடன் ஏற்பளிப்பு, கடன் உறுதி ஆவணம், மாற்று முறி, பங்கு மாற்றம் ரசீதுகள், கப்பல் சரக்குப் பட்டி முதலான நடவடிக்கைகளின் மீது வரி விதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மாநிலங்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் இந்த வரி விகிதங்களை மாற்றி அமைக்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுக்கொள்ள இருக்கின்றோம்.

209. உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலைமையை நாம் உடனடியாகக் கவனித்தாக வேண்டும். தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வசதி மற்றும் துப்புரவு போன்ற அடிப்படைப் பணிகளைக் கூட செய்ய இயலாத அளவிற்கு அவற்றின் நிதி நிலை பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே நிதி நிலையை முழுவதுமாகச் சீரமைக்க வேண்டியுள்ளது. 1958-இல் இருந்து உள்ளாட்சி வரி, நில வரியில் ரூபாய்க்கு 45 பைசா என்ற அளவில் இருந்து வருகின்றது. உள்ளாட்சி மேல் வரியும் 1972-இல் இருந்து நிலவரியில் ரூபாய்க்கு 2.50 என்ற அளவில் மாறாமல் அப்படியே உள்ளது. எனவே உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலை நலிவடைந்ததில் வியப்பொன்றும் இல்லை. இதனைச் சரி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

210. உள்ளாட்சி வரி, நிலவரியின்மீது ரூபாய்க்கு 45 பைசாவிலிருந்து ரூ. 1-ஆக மாற்றி அமைக்கப்படும். தற்போது கிராமப் பஞ்சாயத்துக்களும் நகரப் பஞ்சாயத்துக்களும் உள்ளாட்சி வரியில் சுமார் 55 சதவீதத்தை மானியமாகப் பெற்று வருகின்றன. இனி இது 75 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும். கிராமப் பஞ்சாயத்துக்களும் நகரப் பஞ்சாயத்துக்களும் மக்களுக்குத் தேவையான இன்றியமையாத பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளப் போதுமான நிதி ஆதாரத்தைப் பெற இது வகை செய்யும்.

211. உள்ளாட்சி மேல் வரி தற்போதுள்ள அளவான ஒரு ரூபாய் நிலவரிக்கு ரூ. 2.50 என்ற அளவிலிருந்து குறைந்த பட்சமாக ரூ. 5 முதல் அதிக பட்சமாக ரூ. 10 வரை உயர்த்தி வசூலிக்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் இவ்விரு வரம்புகளுக்குள் ஒரு வரி விகிதத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

212. இந்த மாறுதல்கள் 1—7—1992 முதல் அமுலுக்கு வரும்.

213. ஏற்கனவே கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்ட தொழில்கள், வணிகங்கள், கைவினைகள்' மற்றும் வேலைகள் மீதான தொழில் வரியை விதிக்கத் தேவையான சட்டங்கள் இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500க்குக் கீழ் ஊதியம் பெறும் அரசு அலுவல்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர் களுக்கும் தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த வரி விதிப்பு முறையானது குறைந்த வருமானம் உள்ள பிரிவினருக்குக் குறைவாக இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாத ஊதியம் பெறு வோர்களுக்கு இந்த வரி விதிப்பு கீழ்க்கண்டவாறு இருக்கும்:

| வரிசை எண். | மாத வருமானம் | அரையாண்டுக்கான வரி விகிதம். குறைந்த பட்சம். ரூபாய். | அரையாண்டுக்கான வரி விகிதம். அதிக பட்சம். ரூபாய். |
|---|---|---|---|
| 1. | ரூ. 1,500—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 2,000-க்குள். | 30 | 48 |
| 2. | ரூ. 2,000—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 2,500-க்குள். | 48 | 72 |
| 3. | ரூ. 2,500—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 3,000-க்குள். | 72 | 120 |
| 4. | ரூ. 3,000—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 5,000-க்குள். | 120 | 240 |
| 5. | ரூ. 5,000—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 7,500-க்குள். | 300 | 450 |
| 6. | ரூ. 7,500—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 10,000-க்குள் .. | 450 | 600 |
| 7. | ரூ. 10,000—ம் அதற்கு மேலும் ஆனால் ரூ. 15,000-க்குள் .. | 600 | 900 |
| 8. | ரூ. 15,000-க்கு மேல் .. .. | 900 | 990 |





இதரப் பணியாளர்களுக்குப் பொருத்தமான குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச வரி விகிதம் பற்றிய விவரங்கள் நிறை வேற்றப்படவுள்ள சட்ட முன் வடிவில் அறிவிக்கப்படும். இந்த வரியின் மூலம் வசூலிக்கப்படும் முழுத் தொகையும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கிடைக்கும். இந்த மாற்றியமைக்கப்பட்ட வரி விகிதம் 1992 ஏப்ரல் 1 முதல் அமுலுக்கு வரும்.

214. சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநக ராட்சிப் பகுதிகளில் விதிக்கப்படும் சொத்து வரி விகிதம் பல ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்து வருகின்றது. நாட்டின் வெவ்வேறு நகரங்களில் வெவ்வேறு விதமான வரி விகித முறை கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. இந்த முறைகளைப் பரி சீலித்து நமது மாநிலத்துக்குத் தகுந்த முறை ஒன்றை நாம் ஏற்படுத்த வேண்டும். சொத்து வரியில் முறையான வரி விதிப்பு விகிதங்கள் குறித்து விரைவில் முடிவெடுக்க ஏதுவாக இருக்கும் வகையில் ஒரு ஆய்வு மேற் கொள்ளவிருக்கின்றோம்.

## முடிவுரை.

215. 1992—93 ஆம் ஆண்டில், இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ. 619.09 கோடியாக இருக்கும் என்று நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளேன். செலவுகளைக் குறைக்கச் சில நடவடிக்கைகளை மேற் கொள்வதன் அடிப்படையில், இப்பற் றாக்குறை ரூ. 564.09 கோடியாகக் குறைக்கப்படும். சற்று முன்னர் நான் அறிவித்த செயற் குறிப்புகளின் மூலம், கூடுதலாக ரூ. 70 கோடி நிகர வருமானம் ஈட்டலாம். அதன் பயனாக 1992—93 ஆம் ஆண்டு முடிவில் இறுதி நிலைப் பற்றாக்குறை ரூ. 494.09 கோடியாக இருக்கும். மத்திய அரசு அறிவித்துள்ள கூடுதல் நிதித் திரட்டு நடவடிக்கைகளின் வாயிலாக, மாநிலத் தின் பங்கு என்ற வகையில் ஓரளவு கூடுதல் நிதி பெறவும் வாய்ப்பு உள்ளது. இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இருந்தபோதி லும், வரும் ஆண்டில் நாம் நமது வாய்ப்பு வளங்களை ஒருங்கு திரட்டி வலுப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கி கிறோம். ஆண்டுதோறும் அதிக அளவிற்குத் தொடரும் வருவாய்ப் பற்றாக்குறைப் பிரச்சினையையும் நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

216. கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வருவாய்ப் பற்றாக்குறையும், கணக்கில் கொண்டு வரப்பட்ட தொடக்கப் பற்றாக்குறையும் சேர்ந்து நமக்குத் தொடர்ந்து பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளன. குறைந்தது தொடக்கப் பற்றாக்குறையையாவது சரிக்கட்டச் சிறப்பு நிதியுதவி அளிக்கு மாறு விடுத்த நம்முடைய வேண்டுகோளை மத்திய அரசு பரிசீலிக்குமென நாம் நம்புகிறோம். அப்போதுதான், அரசின் நிதி நிலையை முழுமையாகச் சரி செய்யும் நிலைமையை நாம் அடையலாம்.

217. ஆண்டுத் திட்டத்திற்குச் சிறப்பு நிதியுதவி அளிக்குமாறு விடுத்த நம்முடைய வேண்டுகோளைப் பரிசீலிக்குமாறு மத்திய அரசை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளோம். தமிழ்நாட்டின் நபர் வாரி வருமானத்தைத் தேசிய சராசரி நபர்வாரி வருமானத்திற்கும் மேற்பட்டதாக எடுத்துக் கொள்வதால் ஏற்படுகிற பிரச்சினையை, நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். மேற் சொன்ன நபர்வாரி வருமானத்திற்குப் பொருள் விளக்கம் அளிப்பதில் உண்மையான சிக்கல்கள் உள்ளன. மத்தியத் திட்டக் குழுவானது இப்பிரச்சினையை மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஒன்று, தேசிய சராசரிக்குக் குறைவாக நபர்வாரி வருமானம் உள்ள மாநிலங்களுக்குரிய 20 சதவீதத் தொகுப்பில் தமிழ்நாட்டிற்கு ஒரு பங்கை அனுமதிக்க வேண்டும்; அல்லது, தனிப் பிரச்சினைகளுக்குரிய பங்கான 7.5 சதவீத நிதியில் தமிழ்நாட்டிற்குத் தனி ஒதுக்கீடு ஒன்றை வழங்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகிறோம். ஏழாவது திட்டக் காலத்தில் அத்தகைய நிலைமை ஏற்பட்டபோது, தமிழ்நாட்டிற்குத் தனி ஒதுக்கீடு ஒன்று வழங்கப்பட்டது என்பதையும் நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

218. கடற்கரை எல்லைப் பகுதி மேம்பாட்டிற்காக, 1991—92-ல் தமிழ்நாட்டிற்கு மத்திய திட்டக் குழு ரூ. 15 கோடி ஒதுக்கியுள்ளது. 1992—93 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு குறித்துத் தெரிவிக்கப்படவில்லை. நம்முடைய கடற்கரை எல்லைப் பகுதியில், பாதுகாப்பு முக்கியத்துவத்தைக் கருதி, சிறப்புப் பணிகளை நாம் மேற் கொள்ள வேண்டியுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். இந்தக் கடற்கரை எல்லைப் பகுதியில் வெளிநாட்டுப் போராளிகள் தீவிரவாதிகளை சமாளிக்கும் பிரச்சினை உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. 1992—93-ல் இதற்காகத் திட்டக் குழு தனி ஒதுக்கீடு செய்யும் என நம்புகிறோம்.

219. திட்ட வருவாய் மானியங்கள் தொடர்பான ஒன்பதாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளில் சமன்பாடற்ற நிலை உள்ளது என்பது குறித்து எடுத்துரைக்க விழைகிறேன். ஒன்பதாம் நிதிக்குழு மட்டும், நியாயமான முறையில் கருதிப் பார்த்திருந்தால், தமிழ்நாட்டில் மிக அதிகமான அளவிற்குத் தொடரும் வருவாய்ப் பற்றாக்குறை இன்னும் குறைவாகவே இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். 1990—95 வரையிலான ஐந்தாண்டு கால அளவிற்குத் தமிழ்நாட்டிற்குத் திட்ட வருவாய் மானியமாக வெறும் ரூ. 43 கோடி மட்டும் ஒதுக்கியுள்ளதன் மூலம், பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. 1992—93ல் நிலவக்கூடிய நிலையைப் புதிதாக எடுத்துக் கொண்டு, நாம் பெறுவதற்குரிய திட்ட வருவாய் மானிய அளவு கணக்கிடப்படுமெனில், நமக்கு அதிக அளவிற்குப் பங்குத் தொகை கிடைக்க



வியலும், ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளைத் திட்ட வட்டமாக முடிவு செய்யப்பட்டு விட்ட ஒன்றாக எடுத்துக் கொள்ளாமல், மத்தியத் திட்டக் குழு, இப்பிரச்சினையை மறு ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. திட்ட வருவாய் மானியம் அளிப்பதன் செயல்பாடு, மன நிறைவளிப்பதாக இல்லையென்பதே நம் கருத்தாகும்.

220. கூடுதலாக நிதியுதவி அளிக்க வேண்டுமென்ற நம் கோரிக்கையை, மத்திய அரசு, அதன் நிதிநிலைமை சற்று மேம்பட்டிருக்கும் இந்த நேரத்திலாவது தீவிரமாக பரிசீலிக்கும் என்று நம்புகிறோம். நடப்பாண்டில் நிதியுதவித் தொகுப்பு ஒன்று அளிக்கப்பட வேண்டுமென்பதே, நம்முடைய திட்டவட்டமான வேண்டுகோளாகும். அப்போதுதான், நடப்பாண்டின் இறுதியில் ஏற்படக்கூடிய பற்றாக்குறை சரிக்கட்டப்பட முடியும். அத்தகைய நிதியுதவி கிடைக்குமென நம்புகிறோம்.

221. இப்போது நான் இந்த வரவு — செலவுத்திட்ட அறிக்கையின் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும் அவரது சீரிய தலைமையில் இயங்கிவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியுந்தான் தமிழ்நாட்டை எதிர்நோக்கியிருந்த தீவிர அறைகூவல்களை சமாளிக்கமுடியும் என்றும், தமிழகத்தை வளம் பொருந்திய வழியில் இட்டுச்செல்ல முடியும் என்றும் தமிழகத்து வாக்காளப் பெருமக்கள் பெரிதும் நம்பினார்கள். அந்த நம்பிக்கையுடன் நமக்குப் பெரும் வெற்றியையும் வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கை பொய்க்காத வகையில், அரசை எதிர்நோக்கிய பல்வேறு அறைகூவல்களையும் நாம் வெற்றிகரமாகச் சமாளித்து வந்துள்ளோம். சட்டம் ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்பட்டது. வெளிநாட்டுப் போராளிகளும், தீவிரவாதிகளும் நமது மாநிலத்தின் அமைதியைக் குலைக்க முயன்று விடுத்திருந்த மிரட்டல்கள் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன. முன்னொருபோதும் கண்டிராத வகையிலான நிதி நெருக்கடி என்னும் இருண்ட காலகட்டத்தையும் நாம் ஒருவாறு வெற்றிகரமாகக் கடந்து வந்துள்ளோம். "இந் நிதி நெருக்கடிச் சூறாவளியைத் தாங்கி, நிலைக்கும் வலிமையும் திறனும் இந்த அரசுக்கு உண்டா" என்று பலரும் ஐயப்பாடு தெரிவித்திருந்தார்கள். இந்த நிதிநெருக்கடியைச் சமாளிக்க நாம் துணிவுடனும் திண்மையுடனும் நடவடிக்கை எடுத்து வந்துள்ளோம். இனி நாம் நம்பிக்கையுடன் வளர்ச்சிப் பணிகளில் கருத்தூன்ற முடியும். தமிழகத்திற்குச் செழுமையையும் வளமையையும் சேர்க்க நாம் உறுதி பூணுவோம். மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு மக்களுடைய அரசாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் அனைவரும் தங்கள் வாழ்வில் ஒளி தோன்றும் என்ற பெரும் நம்பிக்கையுடன், எப்போதும் எங்களுக்கு ஆதரவு தந்து

வருகிறார்கள். நமது புரட்சித்தலைவி மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எல்லா மன்றங்களிலும், ஏழை, எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனுக்காகக் எப்பொழுதும் குரல் கொடுத்துக் கொண்டு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது சீரிய தலைமையில் அவர் வகுக்கும் நெறிமுறையின்படி, எத்தகைய பாதகமான சூழலிலும், ஏழை, எளிய, வசதிவாய்ப்பற்ற மக்களின் நலங்கள் எப்போதும் காக்கப் பட்டு வருவதற்கு இவ்வரசு உறுதியளித்து வருகிறது. நமது வாய்ப்பு வளங்களை ஒருங்கு திரட்டி வளர்ச்சி வழியில் மேலும் அடி எடுத்து வைக்கும் வகையில் இந்த வரவு–செலவுத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மிகமிகக்கடுமையான, பாதகமான சூழ் நிலையை நாம் வெற்றி கொண்டுள்ள நிலையில், நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுடைய, திறமையும் ஆற்றலும் வாய்ந்த தலைமையின் கீழ் இனி நாம் முன்னேற்ற வழியில் வீறு நடை போடுவோமாக. (மேசையைத் தட்டும் ஒலி).

222. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த முறை தங்களுடைய வரவு–செலவுத் திட்ட உரைப் புத்தகத்தில் ஒரு மாறுதல் காணப் படுவதைப் பார்த்திருப்பீர்கள். அதாவது, வரவு–செலவுத் திட்ட ஆவணங்களை அளிப்பதில் புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் காண்பார்கள். இந்தத் தடவை முதல் முறையாக, முழுக்க முழுக்க, வரவு–செலவுத் திட்ட ஆவணங்கள் தயாரிப்பும், அச்சிடுதலும் கணினி (கம்ப்யூட்டர்) உதவி கொண்டு செய்யப் பட்டுள்ளன என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

223. இந்த நிதிநிலை அறிக்கையைச் சிறப்பாகவும், செம்மை யாகவும், உருவாக்கித்தர பேருதவியையும் பெரும் ஒத்துழைப் பையும் அளித்த நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்து அரும் பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறை களைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

224. 1992-93 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 9–3–1992 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

—o—

161516